# பாதுகாவலன்

PATHUKAVALAN


| இவ்வாரவிநியோகம் 1 | |
|---|---|
| யாழ். சென்ஜேம்ஸ் | 500 |
| பாஷையூர் பங்கு | 400 |
| யாழ். பேராலயம் | 295 |
| கரம்பொன் பங்கு | 272 |
| இளவாலைப் பங்கு | 264 |
| அச்சுவேலிப் பங்கு | 260 |
| சில்லாலைப் பங்கு | 225 |
| மானிப்பாய் பங்கு | 200 |
| பருத்தித்துறை பங்கு | 196 |
| மன்னார் பேராலயம் | 192 |
| வங்காலைப் பங்கு | 185 |
| மண்டைதீவுப் பங்கு | 175 |
| பாண்டியன் தாழ்வு | 175 |
| நெடுந்தீவுப் பங்கு | 161 |
| சுன்னாகம் பங்கு | 158 |
| மாதகல் | 155 |


மலர்: 115 இதழ் : 35 22-9-1989 (செப். 22—செப். 29) ரூபா 1-50 — இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு



RECEIVED 1989 Periodicals Division Library


உலக வரலாற்றில் சரித்திரப் புகழ்வாய்ந்த மாபெரும் நிகழ்ச்சி நவம்பர் மாதம் மாஸ்கோவில்

# திருத்தந்தை மாஸ்கோ விஜயம்

# வரலாற்றில் முதலாவது சந்திப்பு

**திருத்தந்தையும், ஜனாதிபதி கோர்பச்சேவ்வும் வருகிற நவம்பர் மாதம் சோவியத் யூனியனில் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்த இருப்பதாகவும் தொடர்ந்து ஜனாதிபதி கோர்பச்சேவ் பதில் விஜயம் ஒன்றை வத்திக்கானுக்கு மேற்கொள்ளவிருப்பதாகவும் ரோமில் உள்ள சோவியத்தூதர் நிக்கொலாய் லுன்கோவ் அறிவித்துள்ளார்.**

(ரோம். செப். 13) திருத்தந்தை வருகிற நவம்பர் மாதம் சோவியத்யூனியனுக்கு விஜயம் செய்ய இருக்கிறார்.

அப்போது ஜனாதிபதி கோர்பச்சேவ்- திருத்தந்தை சந்திப்பு இடம்பெறும் என்று ரோமில் உள்ள சோவியத்தூதர் நிக்கொலாய் லுன்கோவ் சொன்னார்.

திருத்தந்தை ஒருவரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தப்போகும் முதலாவது கிரெம்ளின் தலைவராக திரு. கோர்பச்சேவ் இருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாஸ்கோ செல்லவிருக்கும் திருத்தந்தை, அங்கு கிறிஸ்தவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு விஜயம் செய்யத் தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதி கோர்பச்சேவ் பதில் விஜயம் ஒன்றை வத்திக்கானுக்கு நவம்பரில் மேற்கொள்வார் என்றும் சோவியத்தூதர் நிக்கொலாய் லுன்கோவ் சொன்னார்.

இத்தாலி வானொலி ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் சோவியத்தூதர், நிக்கொலாய் லுன்கோவ், ஆண்டு முடிவிற்குள் அமெரிக்க அதிபர் புஷ்ஷை திரு கோர்பச்சேவ் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்த இருக்கிறார் என்று சொன்னார்.

## பாகிஸ்தான் அரசு சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அளிக்கும்

இந்தோனஷியாவிலுள்ள மேதான் மறைமாவட்டத்தில் ஆகஸ்ட் 1-4 ம் திகதிகளில் நடைபெற்ற, குருக்கள், துறவிகள், பொதுநிலையினரான 124 பேர் பங்குபற்றிய கூட்டமொன்றில், வடக்கு சுமாத்திராவில் தற்போது குருக்களில்லாதிருக்கும் பங்குகளுக்கு பொதுநிலை நிர்வாகிகளை நியமிப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

அங்குள்ள 42 பங்குகளிலும் 1220 கிளைப்பங்குகளிலும் 357,483 கத்தோலிக்கர் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் பங்கில் பணிசெய்யும் குருக்கள் 70 பேரே உள்ளனர்.

பெரும்பாலான கிராமிய மக்களுக்கு ஞாயிறு திருப்பலி கிடைப்பதில்லை. பொது நிலையினரால் நடத்தப்படும் வார்த்தைமட்டுமே உண்டு பொதுநிலையினரைப் பங்கு நிர்வாகிகளாக நியமிப்பது பற்றி ஒரு குழு பல மாதங்களாக ஆய்வுகளை நடத்தி வருகிறது. இவ்வாறு நியமிக்கப்படும் பொதுநிலையினர் ஒரு குருவின் அதிகாரத்துக்குட்பட்டவராகவும் தன் பங்கின் அபிவிருத்திக்குப் பொறுப்புள்ளவராகவும் இருப்பார்.

## 'மானிட உயிரின் மாண்பினை மதி -அன்றேல் அழிவே எமது கதி'

நாளுக்கு நாள் வளர்ந்து செல்லும் பயங்கர நிகழ்வுகள், உயிரிழப்புகளைக் கொண்ட சூழல் மத்தியிலும், எந்நேரத்திலும் எவரினதும் உயிர் பறிக்கப்படலாம் என்ற வன்முறை வட்டத்திற்குள்ளும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்நிலை, இனியும் நீடிக்க வேண்டுமா? இதனை யாராவது நிறுத்துவார்கள் என்ற எதிர்பார்ப்பு மனநிலை மாறவேண்டும். அமைதியும், அன்பும், நீதியும், சமாதானமும் எம்மிடையே நிலவ நாம் என்ன செய்யப் போகிறோம்? என்ற நல்லெண்ணம் நமக்குள்ளே வேர்விட வேண்டும். இவ்வளவு காலமும் எமுயிரைக் காப்பாற்ற அடுத்தவர் உயிரைப் பறித்தோம். உண்மையில் யாராவது ஒருவர் இறக்கும் போது என்னில் ஒரு பகுதியே இறக்கின்றது. இந்நிலை நீடிக்குமானால் எனதும், எமதும் எதிர்காலமே சூனியமாகிவிடும்.

எனவே அடுத்தவனுயிர் என்று அசட்டை செய்து விட முடியாது. எமது உயிர் காப்பாற்றப்பட வேண்டுமானால் மற்றவர் உயிரை நாம் பாதுகாக்க வேண்டும். இந்நிலை எமது இனத்தை அசுரவேகத்தில் அழித்துக் கொண்டிருப்பதால் நாம் ஒவ்வொருவரும் அதை மாற்றியமைக்க ஆக்கபூர்வமாகச் செயற்படுவோம். ஒருவரொருவரின் உயிரை மதிப்போம்

யாழ், மறைவட்ட நீதி, சமாதான அபிவிருத்தி ஆணைக்குழு.
தலைவர்.
அருள்திரு. ம. பயஸ்
செயலர்.
அ. சந்தியாப்பிள்ளை

## விசுவாசத்தைப் பெற்ற கிராமம்

முன்னாள் மராத்தி கத்தோலிக்க பத்திரிகையொன்றின் ஆசிரியரான ஆச்சாரிய சூரியவன்ஷி ஒரு கிராமமே மனந்திரும்பிய அதிசய வரலாற்றைக் கூறுகிறார்.

ஒரு வருடத்துக்கு முன் இவர் இன்னும் அறுவருடன் கிறிஸ்தவ ஆதிவாசிகளின் கூட்டமொன்றில், கீர்த்தனைகள் பாடுவதற்காக நவகவ் என்னும் கிராமத்துக்குச் சென்றிருந்தார். அன்றிரவு அக்கிராமவாசிகள் அவர்கள் மீது கல்லெறிந்து அடித்துத் துன்புறுத்தியதோடு, அவர்களைத் தீமூட்டி எரிப்பதாகவும் பயமுறுத்தினர். இவ்வளவும் ஒரு மாநில அமைச்சரது வீட்டின் முன் நிகழ்ந்தன.

ஆனால் இந்த ஆண்டு அவர் அக்கிராமத்துக்குச் சென்ற போது அங்கு ஒரு பெரிய மாற்றத்தைக் காணக்கூடியதாயிருந்தது. ஆதிவாசிகளிடமிருந்து அவர் நிகழ்ந்தவற்றை அறிந்து கொண்டார்.

குழப்பத்தை விளைவித்த குடிவெறியர் பின்பு மன்னிப்புக் கேட்டதுடன், அவர்களில் நாற்பத்தைந்து பேர் திருமுழுக்குப் பெறவும் விரும்பினர். சிலருக்கு அது அளிக்கப்பட்டுவிட்டது. தாம் எரித்த கோயிலை திரும்பக் கட்டியதுடன் இன்னும் பெரிதாக்கவும் எண்ணியுள்ளனர். ஞாயிறு தோறும் ஏனைய கிறிஸ்தவருடன் சென்று மக்களை ஆலயத்திற்கு அழைக்கின்றனர்.

குற்றம் செய்தவர்களைத் தடுக்காத பொலீஸ் அதிகாரி தூர இடத்துக்கு மாற்றப்பட்டுவிட்டார். கிறிஸ்தவத் தலைவர்களைத் துன்புறுத்தியவர்களுள் ஒருவன் மாரடைப்பால் இறந்து விட்டான். மற்றொருவன் உழவு யந்திரத்திலிருந்து விழுந்து கைகால்களை முறித்துக் கொண்டான்.

## அதிகாலைச் செபத்தில் மக்கள் ஆர்வம்

ஜப்பானில் அதிகாலையில் நடைபெறும் "சொட்டோகாய்" என்னும் அனைத்துக் கிறிஸ்தவ வழிபாடுகளில் மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர். சுமார் 150 செட்டோகாய் வழிபாடுகள் ஜப்பானில் நடைபெற்றுவருகின்றன. வாரந்தோறும் நடைபெறும் இவ்வழிபாடுகளில் கத்தோலிக்கரும், புரோட்டஸ்தாந்தினரும் கலந்துகொள்ளுகின்றனர்.

மேமாதத்தில் வருடாந்த செபவழிபாடு ஒன்று இடம் பெறுவது வழக்கம். 1990 ல் ஷிக்கோக்கு என்னுமிடத்தில் மூன்று நாள் நிகழ்ச்சிகள் இடம் பெறவிருக்கின்றன.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

### சட்டம், ஒழுங்கு

முன் ஒருபோதும் இல்லாத அளவுக்கு முழு இலங்கையிலுமே சட்டம், ஒழுங்கு வெகுவாக சீர்குலைந்திருப்பது அனைவரையும் கலக்கத்திற்கு உள்ளாக்கியிருக்கிறது.

சட்டத்தின் காவலர்கள் சட்டத்தை மீறி, தான் தோன்றித்தனமாக நடக்கின்ற காரணத்தால் நியாயம் கேட்க வழியற்ற இக்கட்டான சூழ்நிலை தோன்றியுள்ளது.

மனித உரிமைகள் மீறப்படுவதைச் சுட்டிக்காட்டி நியாயம் கேட்டு வாதாடக் கூடிய சட்டத்தரணிகளின் மாயமான மறைவுகள் நிலைமையை இன்னமும் மோசமாக்கிக்கொண்டு செல்கின்றன.

1971இல் இருந்த ஆட்சியாளர்கள் கிளர்ச்சியை அடக்குவதற்கு கையாண்டதாகக் கூறப்படுகின்ற அதே உத்தியைத் தாமும் கையாண்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிப்பதாக அரசாங்கம் செயலில் இறங்கியது.

அன்றைய உத்தி இன்றைய காலத்துக்குப் பொருந்தாது என்றே கூற வேண்டும். அன்றைய கிளர்ச்சியாளர்கள் மக்களின் எதுவித ஒத்துழைப்பையும் பெற்றிருக்கவில்லை. தமது போராட்டத்திற்கு எதுவித தகுந்த காரணத்தையும் கொண்டிருக்காத காரணத்தால் நிலைத்து நிற்க முடியவில்லை.

ஆனால் இன்று பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் அரசுக்கு எதிராகக் கொண்டுள்ள முறைப்பாடுகளுக்குக் கணக்கில்லை. அரசின் அநியாயங்களும், அக்கிரமங்களும் அதிகரித்துக் கொண்டே செல்லுகின்ற காரணத்தால் மாற்றுவழி தேட வேண்டும் என்ற எண்ணம் வளர்ந்து கொண்டே இருக்கிறது.

அரசு போகின்ற போக்கில் வெகு விரைவில் தெற்கில் பயங்கரவாதம் முடிவுக்கு வந்துவிடும் என்று பகல்கனவு காண்பவர்கள் ஏராளம். ஆனால் உண்மையாகவே நாளாந்தம் வீதிகளிலும், வீடுகளிலும் கொலை செய்யப்படுபவர்கள் பயங்கரவாதிகள் தானா?

அப்பாவிப் பொதுமக்களைக் கொலைசெய்து, பயங்கரவாதத்தை அடக்க முயலுவது, அரச விரோத சக்திகளை வளர்க்க சாதகமாகப் பயன்படுமேயன்றி அரசும் மக்களும் எதிர்பார்க்கும் அமைதிக்கு வழிகோலாது.

பாடசாலைகள் இயங்க முடியாத நிலை, பல்கலைக் கழகங்கள் நிரந்தரமாக மூடப்பட்ட நிலை, தனியார் கல்விநிலயங்களும் மூடப்படும் அபாயம், தொடர்ச்சியான இரவு ஊரடங்கு உத்தரவு அனைத்துமே அரச விரோத செயல்களும், அரச அத்துமீறல்களும் தீயெனப் பற்றி எரிய ஊற்றப்படுகின்ற நெய்யாகவே அமைகின்றன.

நாடு முழுவதிலுமே நடைபெறுகின்ற அநியாயங்கள், இராணுவப்பலத்தால் நடத்தப்படுகின்ற அத்துமீறல்கள், உரிமைமறுப்புக்கள் எல்லாம் தாங்கிக் கொள்ள முடியாத, அனுமதிக்க முடியாத செயல்களாக இருந்தபோதிலும், அவற்றிற்கு எதிராக எதுவுமே செய்யமுடியாதிருக்கும் சர்வாதிகார அடக்குமுறைப் போக்கு வெகு பாதகமானது. சட்டம், ஒழுங்கு சீர்குலைவுக்கு காரணமாக இருக்கின்ற அரசு உண்மை அரசாக இருக்க முடியுமா?

மக்களின் உரிமைகளை மதிக்காத பயங்கரவாதச் செயல்கள் அரச எதிர்ப்பியக்கங்களால் ஆற்றப்படும் போது ஆத்தாதவன் செயல் என வர்ணித்துவிடலாம். அரசும் அரச காவலர்களும் அதையே செய்யும் போது அதுவும் ஆத்தாதவன் செயலாகவே கொள்ளப்படுகின்றன. உண்மை அரசின் செயல்களுக்கு அவை ஒவ்வாதவை.

பொறுமை, சகிப்புத்தன்மை, தியாகம் இவற்றோடு கூடியதாக மனித உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நீதிபிறழாது ஆள்வதுதான் உண்மை அரசுக்குரிய குணதிசயங்கள். அது மருந்துக்கும் கிடைக்காதா? அரசு சவாலை ஏற்குமா?

## தேனருவி

### ஆண்டின் 25—ம் ஞாயிறு (24-09-89)
### பணக்கார ஏழைகளே!

"நெஞ்சு பொறுக்குதில்லையே- இதை நினைந்து நினைந்திடினும் பொறுக்குதில்லையே கஞ்சி குடிப்பதற்கிலார்க் அதன் காரணங்கள் இவையெனும் அறிவுமிலார். பஞ்சமோ பஞ்சம் என்றே- நிதம் பரிதவித்து உயிர் துடிதுடித்துத் துஞ்சி மடிகின்றாரே- இவர் துயர்களைத் தீர்க்கவோர் வழியில்லையே'' என அன்று வயிறு சுருங்க வறுமையின் பிடியில் மடிந்துகொண்டிருந்தவரின் ஏக்கத்திற்கு பாரதியார் குரல்கொடுத்தார். வறுமைக்குக் காரணம் விதியன்று, ஒரு சில மனிதர்கள் செய்யும் அநீத செயல்களே யாகும். இன்று 80 வீதம் உலகச்சொத்தை வைத்திருப்பவர்கள் 25 வீதம் மக்களே. மிகுதியான 75 வீதம் மக்களும், 20 வீதமான செல்வத்திற்காக அடிபிடிபடுகிறார்கள்.

இப்படிப்பட்ட அநீத அமைப்பு 2800 ஆண்டுகளுக்கு முன்னர் இறைவாக்கினர் ஆமோஸ் காலத்தில் இஸ்ரவேல் சமூகத்தில் தாண்டவம் ஆடியது. ஏழைகளையும், எளியவர்களையும் நசுக்கி அவர்களைச் சந்தைச் சரக்காக்கினார்கள். கள்ளத்தராசும், கொள்ளைலாபமும், கொண்டு ஏழைகளின் அற்ப சொத்தையும், சூறையாடினார்கள். காசே தான் கடவுளப்பா எனக் கொண்டு கடவுளை மறந்து மனச்சாட்சியை மழுங்க வைத்த செல்வச் செருக்கருக்கு ஆமோஸ் இறைவாக்கினர் ஒரு மனச்சாட்சியானார்.

நீதியற்ற கண்காணிப்பாளன் என்னும் உவமையிலும் இயேசு உயர்ந்த மதிப்பீடு ஒன்றைக் கற்றுத்தர முயலுகிறார். கண்காணிப்பாளன் மோசடி செய்தான் என்ற குற்றத்திற்காக அவனது முதலாளி அவனை விலக்கிவிட ஆயத்தம் செய்தபோது முதலாளிக்குக் கடன்பட்டிருந்தவரது கடன் தொகைகளைக் குறைத்து எழுதப் பண்ணி அவர்களுடன் நட்பை வளர்க்கிறான். அவனது வழிமுறை குறுக்குப் பாதை என்றாலும் பணத்திலும் பார்க்க நட்பையும், அன்பையும், பெரிதாக எண்ணிய அவனது விவேகத்தை மெச்சுகிறார் இயேசு.

பொருட்களையல்ல ஆட்களை அன்பு செய்யுங்கள் என்பர். ஏழைகளின் தோளில் சௌகரியமாகக் குந்திக் கொண்டு, ஐயோ அவர்கள் பாவம் என்று முதலைக் கண்ணீர் வடிப்போர் அதிகம்.

இன்று மனச்சாட்சியை [illegible] அதிகம். அலுவலங்களில் ஊதியத்திற்கு ஏற்ப உழைக்க மறுப்பது மட்டுமல்ல ஊழல்களை வளர்த்துக்கைலஞ்சங்களால் மக்களை ஏமாற்றுகிறார்களே. சித்திரைவதையென்று காணி, தாலி எல்லாம் அடைவு வைத்தாலும் ஏஜன்சியினுடைய சிறையிலிருந்து மீளுவது அதை விடக் கஷ்டமாகிறதே. பகிஷ்கரிப்பு, போக்குவரத்துத் தடை, தட்டுப்பாடு என்ற போர்வைக்குள் வியாபாரிகள் செய்யும் அநியாயம் கொடுமையிலும் கொடுமை. இந்த அநீத அமைப்புக்களுக்கு அடித்தளமாக பணமும், பணப்பற்றுமே காரணமாகும். பல புனித இயக்கங்கள் கூட களங்கமடைவதற்கு அங்கு குவிந்த பண மூடைகளே காரணமாகும். பணப்பற்று இறைப்பற்றை அரித்தொழிக்கும் ஒரு பயங்கர வைரசு நோயாகும். காசுக்கும் கடவுளுக்கும் தொண்டு செய்ய முடியாது. காசு பெருகினால் உள்ளத்தில் அன்பு வற்றிப் போய்விடும். பணமில்லாதவன் பிணம் என்பர். ஆனாலும் அப்பணம் என்னை அடிமையாக்கக் கூடாது. அப்பணம் என்னை ஆண்டவனிடமிருந்து பிரிக்கக் கூடாது. அப்பணம் என் சகோதரனின் கண்களைக் கலங்க வைக்கக் கூடாது. அப்பணம் அன்பில் என்னை ஏழையாக்கக் கூடாது.

சுவாமி. ஜீவா போல் அ.ம.தி.

ஆமோய். 8: 4—7 பணக்காரர்களே, சற்றுக் கேளுங்கள்.
திமோத். 2: 1—8 கடவுளையும் மனிதரையும் இணைப்பவர் —இயேசு.
லூக். 16: 1—13 விவேகத்தோடு நடவுங்கள்.

## கலைநிலா

### நாட்டார் பாடல்கள்:

(சென்ற இதழ் தொடர்)

தேவதாயார் இயேசுக்கிறிஸ்துவுக்கு மட்டும் தாயல்ல, இயேசுவைப் பின்பற்றும் அனைவருக்கும், தாயானவள். அவளை மோச்சத்து இராக்கினி என அழைப்பதுமுண்டு.

இவையெல்லாம் இப்பாடலில் அழகாக வந்துள்ளன. அது தவிர மூடிவந்த மாந்துகிலே என்ற வரியின் உவமை நயம் மனதைப் பிணிக்கும் தன்மையுள்ளது. இங்கு இயேசுவைப் பற்றிய இன்னொரு அம்பா பாடல்:-

கள்ளர் இரு அல்லில்லா பேர் நடுவில்
கசையடிகள் அல்லில்லா பட்டவரே
சோதனையால் அல்லில்லா ஆறிரண்டு
சீசரையே அல்லில்லா தெரிந்து கொண்டீர்.

இயேசு தான் தெரிந்துகொண்ட சீடர்களில் ஒருவராலேயே காட்டிக்கொடுக்கப்பட்டது சோதனை தானே.

ஒரு பெண் தனது வாழ்வின் பூர்த்தியை தன் தாய்மையிலேயே உணர்கிறாள். அதனால்தான் ஒரு தாய்தான் பெற்ற மழலையை தூங்க வைக்கும் தாலாட்டு பாடலில் தன் ஆசைகளை யெல்லாம் கொட்டியுள்ளாள்.

கொம்புக் கனியோ
கோதுபடா மாங்கனியோ
வம்புக் கமுகிறீரோ
வாயெல்லாம் தேனூற.

★ ★ ★

மந்தி குதிபாயும்
மாப்பழுத்த சோலையிலே
தம்பி குதிபாய்வான்- தன்
தாயார் மடி மேலே.

குழந்தை பெறாத மலடிகளுக்கு சமூகத்தில் எவ்வித அந்தஸ்துமில்லை. அவளை அனேக நல்ல காரியங்களுக்கு முன்னிறுத்தாமல் ஒதுக்கியே வைத்துவிடுவார்கள். அத்துயரத்தை ஒரு பெண்ணால்தான் பூரணமாக அறியமுடியும். இதற்கென்றே பெரும் தவங்களும், விரதங்களும் செய்கின்றார்கள். இங்கு தவங்கள் செய்து பெற்ற ஒரு தாய் உள்ளம் இவ்வாறு பூரிக்கின்றது.

பிள்ளை இல்லை யென்று
பெருந்தவங்கள் செய்தேனே
மைந்தன் இல்லை யென்று
மாதவங்கள் செய்தேனே

★ ★ ★

வெந்த மாத் தின்றால்
விரதம் அழியு மென்று
பச்சை மாத் தின்று
பகவானை கை தொழுது.

குழந்தை யற்ற பெண்ணும் கணவனிழந்த பெண்ணும் ஒப்பீட்டளவில் ஒரே நிலையே. அந்தந்து இல்லாத பெரும் துயருடன் பழிச் சொல்லும் சேர்ந்துவிடுகிறது.

கூட்டிவிட்ட குப்பை யெல்லாம்—இப்ப
கூசாமல் பேசுகுது
தள்ளி வைத்த குப்பை யெல்லாம்—இப்ப
அடக்காமல் பேசுகுது

(மிகுதி அடுத்த இதழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ‘கரு’வான கதை

சென்ற இதழில் மறையுடல் ‘உரு’வான கதை பார்த்தோம்
விதையின்றி மரமில்லை
திரியின்றி விளக்கில்லை
அது போல
‘கரு’வின்றி ‘உரு’வும் இல்லைத்தானே
ஆமாம் திருச்சபைக்கு கருக்கொண்ட கதையுமொன்றுண்டு
இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்......
கன்னிக்குப் பிறந்தவன்,
தச்சனின் மகன்,
தோளிற்புரளும் தலைமுடியும், தாடியும்,
ஒளிவீசும் கண்களும் கொண்ட
ஆஜானுபாகுவான ஒரு யூதன்,
முதிர் இளைஞன்,
சுமார் முப்பது வயதிருக்கும்,
கலிலேயாக் கடற்கரையெல்லாம்
தெய்வீக நடை பயின்றான்
அவனே சொன்னான்
அவன் தொழில் “பிடித்தல்” என்று
வன்முறையாலல்ல
வற்புறுத்தலாலுமல்ல
அன்பினால் ஆள் சேர்த்தான்
அருள் முகத்தால் வசீகரித்தான்
அவன்தான் இயேசு
இயேசுவிடம் ஒரு நோக்கிருந்தது
அதை நிறைவேற்ற திட்டமான போக்கிருந்தது
மனிதனை மனந்திருப்பல்
சிலுவை மரமேறி பாவக்கறை களைதல்
மண்ணிற்கும் விண்ணிற்கும் பாலமிடல்
இறையரசை இவ்வுலகில் இறக்கிவரல்
இதுதான் அவர் நோக்கம்
நோக்கம் சரிதான்
இலட்சியம் இனியதுதான்
நிறைவேற்றும் வழியென்ன?
இறைமகனின் முறையென்ன?
முடிவுதான் வழியை நியாயப்படுத்தல் முடியாதே
எச்செயலும் முதலில் சிந்தனையில் பின்னர் செயலில்
முதலில் தலையில் பின்னர் உடலில்
அதனால் தானோ?
தான் தலையாக தனக்கு உடலாக
ஒரு சபையை ஸ்தாபித்தார் இயேசுபரன்
இஸ்ராயேல் மக்களின் குல முதுவர்கள் பன்னிருவர்
அவர்வழி வந்த கோத்திரங்களும் பன்னிரண்டு
இயேசு தெரிந்தெடுத்த அப்போஸ்தலரும் பன்னிருவர்
அப்போஸ்தலருக்கு துணையாய் மேலும் எழுபத்திரண்டு சீடர்கள்
அவர்களுக்கு இயேசு பயிற்சியளித்தார்.
தெருக்களில் போதித்தார்.
புதுமைகளால் புத்தி புகட்டினார்.
குன்றுகளையே மன்றுகளாக்கி
பரிசேயருடன் பட்டிமன்றம் நடத்திக் காட்டினார்
எளியவருக்கு இரங்கவும்
வறியவருக்கு உதவவும் வழிகாட்டினார்.
முதலிடம் தேடுவோரின் முகத்திரை கிழிக்கவும்,
பணத்தையும் பட்டத்தையும் பஞ்செென மதிக்கவும்
மனதைப் பக்குவம் செய்தார்.
ஆவிகள் மேல் வலுவளித்து
வெளிக்களப் பயிற்சிக்கென குழுக்குழுவாய் அனுப்பிவைத்தார்.
தன் இறுதி நாட்களில்
பன்னிருவரில் ஒருவரை
இராயப்பரை
அனைவருக்கும் தலைவராக்கி
அவருக்கும் அவர் வழி வருவோருக்கும்
போதனையில் வழுவாதிருக்கவும்,
பாவங்களை மன்னிக்கவும் அதிகாரமளித்தார்.
அனைவரையும்;
ஒரு கொடிக்கிளையாய்
ஒரு உடல் உறுப்பாய்
இருக்கப் பணித்தார்.
தன்னுடலையே சிலுவையில் பிட்டு
பலி ஒப்புக் கொடுக்கவும்
பலி வாழ்வு வாழவும் பணித்தார்.
தன் இறுதி நாளில்
விண்ணேகும் முன்பு
பரிசுத்த ஆவியை வாக்களித்து
உலகெங்கும் சென்று ‘இறையரசு நெருங்கியது’
என்ற நற்செய்தி பரப்பும் சபையாகச் செயற்படவும்
வாக்களித்தார்.
இப்படித்தான்
‘பெந்தக் கோஸ்தே’ அன்று திருச்சபை ‘உருக்’கொண்டாலும்
இயேசுவில் காலத்தில்
அவரது சொந்த முயற்சியில் ‘கரு’க் கொண்டது.
அவராலேயே ஸ்தாபிக்கப்பட்டது.

—சந்திரன்

இன்றைய உலகின் அவல நிலை—1.

# புதியதோர் யுகத்தின் பேறுகால வேதனை

—அருட்திரு. அதிரியான் யோசப் அ.ம.தி.

(சென்றவாரத் தொடர்ச்சி)

இன்றைய மனிதன் வாழ்வது ஒரு உயர் இலட்சியத்திற்காகவல்ல மாறாக, மேற்கூறியதுபோல், அவ்வப்போதைய சந்தர்ப்பத்திற்கேற்ப எப்படி வாழ்வதென்பதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்து, போட்டி மனப்பான்மையுடன் தன் வாழ்நாளைக்கழிக்கின்றான். எனவே அவனது நாளாந்த வாழ்க்கை நிலையற்ற நிம்மதியற்ற நாயோட்டமாகவே மாறுகிறது.

தொழிற்சாலையில் பாட்டாளி இயந்திரத்தின் ஓர் பற்சக்கரமபோல் குறுகிய ஒரு தனிவட்டத்திற்குள் சுழன்று துவளுகின்றான். அவ்வாறே அலுவலகங்களிலும், நிறுவனங்களிலும் பணியாற்றுவோர் தங்கள் நாற்காலிகளோடு ஒட்டிப்போய்க் கிடக்கிறார்கள். தனித்துறை நிபுணர்களும்கூட Specialists) விரிந்த அறிவும் பரந்த நோக்குமின்றி தங்கள் வாழ்க்கையின் அலுப்பைத் தீர்க்க அல்லது மறக்கததகாத சிற்றின்பத்தை அல்லது போதைப் பொருளை நாடத் தூண்டப்படுகிறார்கள்.

கிராமங்கள் நகரமயமாதலால் (Urbanization) சுற்றாடலும், மனித வாழ்க்கையின் நோக்கும் போக்கும் உலகமயமாகவும் மதச்சார்பற்றதாகவும் (Secularism) மாறும்ஆபத்துண்டு இதனால் பலருக்கு நகரவாழ்வு நரக வாழ்வின் ஆரம்பமாகின்றது. கடவுள் இல்லையென அன்று வாதாடியவர்களுக்குக்கூட இன்று இப் பிரச்சனையைப்பற்றி நினைக்க நேரமுமில்லை அக்கறையுமில்லை, சமயம் என்பது அவர்களுக்கு இனி சுத்த சூனியமாகிவிட்டது. இத்தகைய நடைமுறை நாத்திகம் (Practical Atheism) பட்டி தொட்டிகளிலும் பரவிச் சிறுவர்களையும் பாதிக்கத் துவங்கிவிட்டது. எனவே முன்னர் தொழிலாளர்களை இழந்த திருச்சபை இன்று இளைஞர்களையும் இழக்க நேரிடுகிறது.

அன்றைய மக்கள் தங்கள் பிள்ளைகளிலும், சுயநற்பண்புகளிலும், ஆற்றல்களிலும், கைத்திறனிலும், அதன் படைப்புக்களிலும் பெருமை பாராட்டினர்கள். ஆனால் இன்றைய மக்கள் தாங்கள் வைத்திருக்கும் நுகர்வுப்பொருட்களிலும், ஆடம்பரப் பொருட்களிலுமே (Consumer and Luxury Goods) பெருமைப்படுகின்றனர். எனவே இறைவனையும் மனிதனையும் விடச் சிறந்தது. சடப்பொருட்கள் என்பதே இன்றைய வேதாந்தம். ஆடம்பர வாழ்க்கையிலும், பொருட்களிலும், நிறைவும் நிம்மதியும் காணாதவர்கள் போதைப் பொருட்களில் சரணாகதி அடைகின்றனர். சிலர் தற்கொலையும் செய்கின்றனர்.

நாகரீக வளர்ச்சியின் வேக வீதத்திற்கேற்ப இருதலைமுறைகளிடையே உள்ள வேறுபாடு (Generation gap தலைமுறை இடைவெளி) அதிகரிக்கும். இதனால் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும், முதியோர்களுக்கும் வாலிபர்களுக்கும், அதிகாரிகளுக்கும் இளைஞர்களுக்கும் இடையே நிலவும் பரஸ்பரபுரிந்துணர்வும் நம்பிக்கையும் தேய்ந்து போகும் இத்தகைய சங்கடமான சிக்கலுக்கு நம்நாடு விதிவிலக்கல்ல

சமூகத் தொடர்பு சாதனங்கள் உலகச் செய்திகளையும் அதன் நிலையையும் பிரதிபலிப்பதுமல்லாமல் உலகை ஆட்டியும் படைக்கின்றன. தவறான மதிப்பீடுகள், அரைகுறையான உண்மைகள், போலிவிளக்கங்கள், அரசியல் மற்றும் பிறப் பொய்ப்பிரசாரங்கள், மனதைக் கவர்ந்து மயக்கும் வர்த்தக விளம்பரங்கள் போன்றவையால் இச்சாதனங்கள் மூளைச்சலவை (Brain washing) செய்து வருகின்றன. சிற்றின்ப உணர்வுகளைத் தூண்டி மனிதனை இழிவுபடுத்தும் கலை நிகழ்ச்சிகளும அறிதுயிலூட்டி (Hypnotize) மதிகெடச்செய்யும் பண்பற்ற பண்ணிசைப்பும், நரம்புணர்வுகளுக்கும் உதையத்துடிப்பிற்கும் தீங்கிழைக்கும் விபரீத மேளதாளங்களும் எங்கள் வீடுவாசல்களிலும் நுழைந்து பிஞ்சு நெஞ்சங்களையும் கூட உறிஞ்சிக் குடிக்கின்றனவே.

எல்லோரும் நன்கறிந்த நம் சொந்த நாட்டுப் பிரச்சினைகளை இங்கு விவரிக்கத் தேவையில்லை. உல்லாசப் பிரயாணிகளின் அசிங்கமான நாட்டங்களும் போதைப்பொருள் கடத்தலும், வெளிநாடுசென்று சமூகக் கட்டுப்பாடுகள் (Social Sanctions) இழந்தஅகதிகளான பரதேசிகளினதும் சுகதேசிகளினதும் (Inland Refugees) அவல நிலையும் எமது சமுதாய வாழ்க்கையையும் பண்பாட்டையும் தாக்கத்தான் செய்யும்.

போர்க்கோலங்கொண்டுள்ள ஒரு நாட்டில் சட்டமும் நீதியும் மலையேறிவிடும் கொள்ளையும் கொலையும் கைதேர்ந்த கலைகளாகிவிடும். இவ்வரசுழியும் (அராசகமும்), சமூகநெறிப் பிறழ்வும (Anomy சட்டமற்ற மனநிலை) ஒருசந்ததிமட்டுமெனினும நீடிக்கும் என சரித்திரம் சான்று பகர்கின்றது.

(தொடரும் பாகம்—2: பரிகாரம் தேடல்)

# சில்லாலைப் பங்கில் அறிமுகம்

சில்லையூர் பெற்றெடுத்த சிறப்புமிக்க செல்வங்கள். எம் நாட்டிலும் வெளிநாடுகளிலும் பரந்து சேவையாற்றும் அருட்கன்னியர்களை எம் இளம் தலைமுறையினருக்கு அறிமுகப் படுத்தும் விழா ஆவணித் திங்கள் 5-ம் நாள் காலை 8 30 மணியளவில் எமது பங்கில் சிறப்பான விதமாக நடைபெற்றது. அழகாக அலங்கரிக்கப்பட்ட அன்னையின் வீதியிலே பாண்ட் வாத்தியக் கோஷ்டிகள் முழங்க, அருட் கன்னியர்கள், அருட் தந்தையர்கள் பங்கு மக்கள் சகிதம் பாடசாலையில் வரவேற்கப்பட்டனர். புனித. வின் சென்டிபோல் சபையினரால் இவ்விழா சிறப்பாக நடாத்தப்பட்டது. சிறப்பு விருந்தினராக அருட்திரு. லூயிஸ் பொன்னையா அடிகள் கலந்து கொண்டார். பங்குத் தந்தை அருட்திரு. பொனிவஸ் அடிகள் அனைவரையும் அகமும், முகமும் மலர வரவேற்று தலைமையுரை வழங்கினார். அதைத் தொடர்ந்து அருட்திரு லூயிஸ் பொன்னையா அடிகள் துறவற வாழ்க்கை சாட்சிய வாழ்வுக்கு [illegible] இயற்கையான சூழலை ஏற படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தார். அதைத் தொடர்ந்து திருக்குடும்ப சபையின் மாகாணத் தலைவி சகோ கிறிஸ்ரபெல் அவர்கள் அழைப்பின் மகிமை பற்றி உரையாற்றினர்

அடுத்து அப்போஸ்தலிக்க கார்மேல் சபை சகோதரி பற்றிமா நாயகி அழைப்பு என்பது ஒருவர் தம்மை இறைவனுக்கு அர்ப்பணிக்கும் போதே முழுமையடைகிறது என்கிற கருத்தில் உரையாற்றினர். அதைத் தொடர்ந்து திருச் சிலுவைக் கன்னியர் சபை சகோ எமில்டா அழைப்பு என்பது என்ன? இறைவன் தம் அன்பை கிறிஸ்து மூலம் வெளிப்படுத்துகின்றார். எனவே நாமும் குடும்பத்தில் மட்டும் அன்பை வெளிப்படுத்தாது பரந்துபட்ட விதமாக எமதன்பை அனைவருக்கும் கொடுக்கவே எம்மை அர்ப்பணிக்கின்றோம். சேவையாற்றுகின்றோம் எனத் தெளிவாகவும் சுருக்கமாகவும் குறிப்பிட்டார்.

இவற்றைத் தொடர்ந்து சில்லையூர் ஈன்றெடுத்தசேவைச் செம்மல்களைப் பற்றி அகத்தம்மா பிரூஸ்பிள்ளை அறிமுகம் செய்து வைத்தார். எமது பங்கின் இசைச் செல்வம் “இசைத் தென்றல்” எனப்படும் திரு. யேசுதாசன் அவர்கள் பங்குத் தந்தையால் பொன்னாடை போர்த்து பொற்கிளியும் வழங்கப்பட்டு சிறப்பாக கௌரவிக்கப்பட்டார். திரு யேசுதாசன் அவர்கள் இசை இறைவனை அடையும் ஒரு வழி, என்ற ஒரு உரையாற்றியதோடு ஒரு இசையை மீட்டி அனைவரையும் இறைவனோடு ஒன்றிக்கச் செய்தார். பின்னர் நன்றியுரையுடன் கருத்தரங்கும் அறிமுக விழாவும் முடிவுற்றது.

மதிய உணவைத் தொடர்ந்து 2 மணியளவில் திருக்குடும்ப கன்னியர் சபை, கார்மேல் சபை, திருச் சிலுவைக் கன்னியர் சபை சகோதரிகளால் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்ட அழைத்தல் பற்றிய கண்காட்சி இடம் பெற்றது. யுவதிகள் அனைவரும் இக் கண்காட்சியிலும் கொடுக்கப்பட்ட விளக்கங்களிலும் பங்கு பற்றிப் பயன் அடைந்தனர்.

மறு நாட் காலை ஞாயிறு திருப்பலியில் அருள்தந்தை பொனிவஸ் அடிகள் அழைப்பு எல்லாருக்கும் உரியது என்பதையும் அதன் சிறப்புத் தன்மை பற்றியும் மிகவும் தெளிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறினார். ஈற்றில் காலையுணவுடன் இவ் விழா இனிதே முடிவுற்றது.

மேரி ஞானமலர் சாமிநாதர்
சில்லாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசை மாறிய பறவை

## சிறுகதை

ஞாயிறுதிருப்பலிஆரம்பமாவதற்கு இன்னும் 15 நிமிடங்கள் தான் இருந்தன. மாலா பூசைக்கு செல்வதற்கு ஆயத்தமாகி விட்டாள். ஆனால்போகவில்லை. மாலாவின் தந்தை ஒரு பெரிய புடவைக் கடை முதலாளி அன்று லீவு ஆனபடியால் இரண்டாம் பூசைக்குச் செல்வோம் என்று படுக்கையை விட்டு எழும்பாதிருந்தார். மாலா ஒரு செல்லப் பிள்ளை. தாயாரிடம் கோப்பி வாங்கி அருந்திவிட்டு படலையடியில் போவதும் வருவதுமாக இருந்தாள். ஆனால் கோவிலுக்கு போனபாடாய் இல்லை மாலாவின் தாயார் ''பிள்ள மாலா இன்னும் கோயிலுக்குப் போகவில்லையா? ஆயத்தமணி அடிக்கப் போகுது. இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை முழுப் பூஜை காணவேணும் கெதியாய் போ புள்ள'' என்று சொல்ல ''இந்தா போறனம்மா'' என்று பேச்சுக்குச் சொன்னவள் இன்னும் போகவில்லை.

அவள் போகாததற்கு காரணம் எதிர் வீட்டு மோகன் இன்னும் கேற் திறந்து போகவில்லை என்பதுதான். இரண்டு வருடமாக ஒருதலைக்காதலில் உழன்று கொண்டிருக்கும் மாலா இன்று எப்படியாவது தனது விருப்பத்தை மோகனிடம் தெரிவிப்பது என்று எண்ணி விட்டாள். இப்படி எத்தனையோ தடவைகள் எண்ணி, எண்ணி போகனிடம் வலிய கதைப்பதும் பெண்மை இடங்கொடுக்காததினால் அவளது ஆசைக்கு ஆணைபோட்டு மனதினுள் அடக்கி வைத்திருந்தாள்.

இவ்வளவுக்கும் மோகன் மாலாவைப் போல் பெரிய பணக்காரன் அல்ல. நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவன். மாலாவின் தகப்பனாரோ அவ்வூரில் உள்ள பெரிய புள்ளிகளில் ஒருவர். மோகனின் கேற் திறந்த சத்தம் கேட்டதும் மாலாவும் எதிர்பாராத விதமாக சந்திப்பது போல் தன்னுடைய கேற்றையும் திறந்து கொண்டு வெளியே வருகிறாள். இருவரும் காலை வணக்கங்களை பரிமாறுகின்றனர் பேச்சுக்கு சில வார்த்தைகளைப் பேசிய மாலா தன்னுடைய நிலை இலவு காத்த கிளியாக ஆகிவிடக் கூடாதே என்பதற்காக இன்று எப்படியாவது தன்னுடைய எண்ணத்தை வெளியிட நினைத்த போது மோகனின் நண்பனொருவன் குறுக்கிடுகின்றான். மாலா அன்று இலவு காத்த கிளியாக ஏமாற்றத்துடன கோயிலுக்குச் செல்லுகின்றாள்.

திருப்பலி முழுவதும் மாலாவின் சிந்தனையெல்லாம் மோகனைச் சுற்றியே வட்டமிட்ட வண்ணமிருந்தன. மோகனிடம் எப்படி எனது விருப்பத்தை சொல்லுவது? எப்போ சொல்வது? கடிதத்தில் எழுதலாமா? அல்லது நேரடியாக சொல்லலாமா? இரண்டு வருடமாக நான் அவரை விரும்புகிறேன். மறைமுகமாக அதை அவருக்கு சுட்டிக்காட்டியும் அதை அவர் புரிந்து கொள்ளவில்லை. எப்படியும் கூடியகெதியில் நானாக வலிய அவருக்கு இதைச் சொல்ல வேண்டும் என்று நினைத்த மாலாவுக்கு திருப்பலி எப்போது முடிந்தது என்றே தெரியவில்லை.

கோயிலுக்குள் நுழைந்தால் இறைவனைத் தவிர வேறெதையும் நினைக்கக்கூடாது என்ற எண்ணத்தையும் மறந்து மோகனின் சிந்தனையில் இருந்தபடியால் திருப்பலியில் என்ன வாசகம் வாசித்தார்கள் சுவாமியார் என்ன பிரசங்கம் சொன்னார் என்பது ஒன்றும் நினைவில் இருக்கவில்லை. திருப்பலி முடிந்து வீட்டுக்குச் சென்ற போது மாலாவின் அப்பாவும் அம்மாவும் இரண்டாம் பூஜைக்கு சென்றிருந்தார்கள்.

இப்போ மோகன் வந்தால் யாரும் வீட்டில் இருக்கமாட்டார்கள். எனது விருப்பத்தை சொல்லி விடலாம். ஆனால் மோகன், மலரும் மணமும் போல அவ்வளவு நெருக்கமாக மாலாவுடன் பழகியது கிடையாது. திடீரென அவளுக்கொரு யோசனை தோன்றியது.

✻✻✻✻✻✻✻✻✻✻✻

எழுதியவர்:- நீற்ரு சிவந்தி
கொலின்ஸ்
ஊர்காவற்றுறை.

✻✻✻✻✻✻✻✻✻✻✻

அடுத்த வாரம் என்னுடைய பிறந்த நாள் 21 வது வயது பூர்த்தி அடைகின்றது. மிக விமரிசையாகக் கொண்டாட வேண்டுமென்று அப்பா சொல்லி இருந்தார். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எப்படியாவது எனது எண்ணத்தை சொல்லி விடுவது என்று எண்ணினாள். மாலாவிடம் அதிகமாக பேசாவிட்டாலும் காணும் போதெல்லாம் சின்னச் சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு சென்று விடுவான். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் மோகனின் அந்தச் சிரிப்பில் ஆயிரம் அர்த்தங்களை உருவாக்கி கனவு காண தொடங்கி விடுவாள் மாலா. இவரிடம் போய் எனது எண்ணத்தைச் சொன்னால் என்னைப்பற்றி என்ன நினைப்பார். சீ ஒன்றும் நினைக்கமாட்டார். ஒரு ஆண் பெண்ணை விரும்புவதும் அதே போல் பெண் ஒரு ஆணை விரும்புவதும் இயற்கை தானே'' என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

இன்று அப்பா வந்ததும் எனது பிறந்த நாளைப்பற்றிப் பேசவேண்டும் என்று எண்ணினாள். இப்படி நினைக்கும்போது அப்பாவும் அம்மாவும் பூஜை முடித்துவிட்டு வந்தார்கள். மாலா அப்பாவிற்கு தேனீர் கொடுத்துவிட்டு மெல்லப் பேச்சைத் தொடங்கினாள். 'அப்பா எனது 21வது பிறந்த நாள் அடுத்த கிழமை வருகுது என்று சொன்னதுதான் தாமதம் மாலாவின் தகப்பனாருக்கு தலைகால் புரியவில்லை. ''ஓம் பிள்ளை மறந்து போயிற்றன்'' என்று தகப்பனும் மகளும் எப்படி கொண்டாடுவது என்று திட்டம்போட்டார்கள். மாலாவின் தாய்க்கு இது பிடிக்கவில்லை, இருந்தாலும் மாலா ஒரேயொரு பிள்ளையாதலால் அவளது ஆசைப்படி செய்யட்டும் என்று விட்டுவிட்டாள்.

பிறந்த நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. மாலா முதலில் மோகனுக்குத்தான் சொன்னாள். அவனுக்காகத் தானே இந்த ஏற்பாடெல்லாம் பின்னர் தனது நண்பிகளுக்கு சொல்லலாம் என்று எண்ணினாள். அதன்படி அன்று மாலை மோகனின் வீட்டுக்கு சென்றாள். மாலாவைக் கண்டதும் மோகனின் தாய் ''ஆ மாலாவே! வாரும் வாரும் என்ன கனகாலத்திற்கு பிறகு இங்காலப்பக்கம்'' என்று கேட்கும்போது மோகனும் வந்து விட்டான். மோகனைக் கண்டதும் மாலாவுக்கு சந்தோஷம்'' ''அடுத்த கிழமை 24ம் திகதி எனக்கு பிறந்த நாள் நீங்கள் எல்லாரும் கட்டாயம் வர வேணும்'' என்று ஒருவாறு சொல்லி முடித்தாள். அதற்குள் மோகன் ''ஐயோ அன்று எனக்கொரு சோதனை கட்டாயம் போக வேணும் நான் அடுத்தநாள் வாறன் அம்மாவும், தங்கச்சியும் கட்டாயம் வருவினம், என்று சொன்னதும் மாலாவுக்கு தான் கட்டிய கற்பனைக் கோட்டைக்கு யாரோ வெடிகுண்டு வைத்துத் தகர்த்தது போல் இருந்தது. ''அப்படி என்ன பெரிய சோதனை'' என்று மாலா கேட்டாள். ''சோதனை முடிந்து பதில் வந்த பின்புதான் என்ன சோதனை, ஏன் எடுத்தேன் என்று சொல்லுவேன். மாலா ''சரி நான் போயிட்டு வாறன்' என்று எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்கு வந்தாள். அங்கே மாலாவின் அப்பா தனது பிடவைக்கடையில் இருந்து முதல் தரமான பிடவை ஒன்றை மாலாவின் பிறந்த நாளுக்கென எடுத்து வந்திருந்தார். அதை மாலாவிடம் காட்டியதும் ''நல்லாயிருக்கு'' என்று ஒரு சொல்லில் பதிலளித்து விட்டு சென்று விட்டாள். என்ன மாலா ஒரு மாதிரியாய் இருக்கிறாய்'' என்று தகப்பன் கேட்க ''தலையிடிக்குது'' என்று சொல்லி விட்டு போய்ப்படுத்து விட்டாள்.

''எந்த உடுப்பை போட்டாலென்ன மோகன் தான் வரமாட்டாரே என்ற கவலை தான் அவளுக்கிருந்தது. பிறந்த நாள் வந்தது மாலா புது ஆடை அணிந்து அழகாக இருந்தாள். பிறந்த நாள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மோகன் அன்று இல்லையே என்ற கவலை தான் அவளை வாட்டிவதைத்தது. அடுத்த நாள் பிறந்த நாள் அன்று வராத சில சினேகிதிமார் வந்திருந்தனர். அந்த நேரம் மோகனும் வந்தார். அதனால் மோகனிடம் மனம் விட்டுப்பேச சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இப்படி ஒவ்வொரு கிழமையும் தான் பேச முயலும் போது ஏதாவது ஒரு இடையூறு வந்து குழப்புவதையிட்டு மிகவும் மனம வருந்தினாள் மாலா

ஒரு கிழமை சென்றது. ஒரு நாள் மோகன் மாலா வீடு தேடி வந்து கொண்டிருந்தார். இதை மாலா கண்டுவிட்டாள். ஏதோ நல்ல விசயம் தான் சொல்ல வருகிறார், என்று உற்சாகமடைந்தாள்! நான் தனியே இருக்கிறேன் என்று அறிந்துதான் வருகிறார், என்று எண்ணி மோகன் வந்ததும் இருக்கச் சொல்லி உபசரித்தாள்.

மாலா நான் உமக்கு ஒரு முக்கியமான நல்ல விடயம் சொல்லப் போகிறேன் என்று மோகன் சொல்லச் சொல்ல

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

---

## எழுத்தாளர்களே!

பாதுகாவலனில் பிரசுரிக்க சமய / சமூக சிந்தனைகளைக் கருவாகக்கொண்ட சிறுகதைகள் உங்களிடமிருந்தே எதிர்பார்க்கப்படுகின்றன. பிரசுரிக்கப்படும் கதையை எழுதியவருக்கு ரு. 25/= நன்கொடையாக வழங்கப்படும்.

பின்வரும் விதிமுறைகளுக்கமைய கதைகளை எழுதி அனுப்புங்கள்.

(1) முழுத்தாளில் நான்கு பக்கங்களுக்குள் அடங்க வேண்டும்.

(2) வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரமே எழுத வேண்டும்.

(3) பெயர், முகவரி இடப்பட்டு உரிமை கோரப்பட வேண்டும.

(4) அனுப்பவேண்டிய முகவரி:-

''பாதுகாவலன்''
அ. பெ. இல. 2,
யாழ்ப்பாணம்.

(ஆ-ர்.)

---

## புனிதர் வழியில்

**புனித வென்சஸ்லாஸ்**
**செப்டம்பர் 28**
**[கி. பி. 907-929]**

பொஹிமியா நாட்டு அரச குமாரனாகிய இவர், பாட்டியான புனித லுட்மில்லா என்பவரால் மிகுந்த கவனத்துடன் வளர்க்கப்பட்டு சிறுவயதிலே புனிதராகத் திகழ்ந்தார். இவரது தந்தையின் இறப்பின் பின் இவரது தாய் டிராசோமீர் அந்நாட்டை ஆண்டாள். கிறிஸ்தவ வேதத்தை அழித்து விட்டு அஞ்ஞானத்தை பரப்புவதற்கு விரும்பி வேதத்துக்கு விரோதமான அநியாய சட்டங்களை இயற்றினாள். இதை அறிந்த வென்சஸ்லாஸ் தம் நாட்டு மக்களின் விருப்பத்திற்கு இணங்க அரசுரிமை பெற்று அந்தச் சட்டங்களைக் களைந்துவிட்டு திருச்சபையின் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டார். இதனால் இவரது தாய் இவரைக் கொல்லத் தேடினாள். ஒரு நாள் இவர் நற்கருணை நாதர் முன் செபிக்கையில் இவன் தம்பி கோயிலுக்குள் புகுந்து இவரைக் கொன்றான். புனிதர் இறக்கு முன் ''தம்பி இறைவன் உன்னை மன்னிப்பாராக'' என்று கூறி மரித்தார்.

**அதிதூதரான புனித மிக்கேல் கபிரியேல், இரபேல்**
**செப்டம்பர் 29 - புனித மிக்கேல்**

மிக்கேல் என்ற எபிரேய சொல்லுக்குக் ''கடவுளுக்கு நிகர் யார்'' என்று பொருள், விண்ணகத்தில் தேவ தூதர்களின் மத்தியில் குழப்பம் தோன்றிய போது, நல்ல சம்மனசுக்கள் தலைமையில் ''கடவுளுக்கு நிகர் யார்?'' என்று செர்ல்லிக்கொண்டு, ''கடவுளுக்கு விரோதமாய் எழுந்த லூசிப்பேயையும், அவரது சகாக்களையும் நாகத்தில் தள்ளினர். ஆதிக்கிறிஸ்தவர்கள் நோயாளிகளை இத்தூதனிடம் ஒப்படைப்பது வழக்கம் படிப்பினை ''அதிதூதரான புனிதமிக்கேலே'' என்று பக்தியுடன் அடிக்கடி சொல்வோம்

**புனித கபிரியேல்**

கபிரியேல் என்ற சொல்லுக்கு எபிரேய மொழியில் ''கடவுளின் சக்தி'' என்பது பொருள். கடவுளின் முன் நிற்பதாகச் சொல்லப்படும் ஏழு தேவதூதர்களில் இவரும் ஒருவர். மகிழ்ச்சியும், ஆற்றலும் தரக்கூடிய செயதிகள் விண்ணகத்தில் இருந்து இறைமக்களுக்கு கொண்டுவந்து சேர்க்கும் பணி இவருடையது. உ+ம் தேவதாய்க்கு மங்கள வார்த்தை சொன்னது படிப்பினை கபிரியேல் சம்மனசு மங்களவார்த்தை கூறிய சம்பவத்தை நினைவில் கொள்வோம்

**புனித இரபேல்**

எபிரேய மொழியில் இரபேல் என்பதற்குப் பொருள்''கடவுள் குணமளிக்கின்றார்''. என்பதாகும் தொபியாஸ் ஆகமத்தில் சொல்லப்படுவது போல கடவுளின் முன் எபபோதும் நின்றுகொண்டிருக்கும் ஏழு தூதர்களில் இவரும் ஒருவர். பழைய ஆகமத்தில் பெரிய தொபியாஸ் பார்வை இழந்திருந்த போது இவர் குணப்படுத்தினார் என்றும். அவர் மகனுக்கு வழித்துணையானார். எனறும் கூறப்படுகிறது. படிப்பினை. எனவே நோயாளிகளுக்கும்பயணிகளுக்கும் பாதுகாவலரான இவர் துணையை நாடுவோம.

S. S. கருணைதாஸ்
அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் நமது வாழ்க்கையும்

(சென்ற இதழ் தொடர்)

"இன்றைய இளைஞர் நாளை நாட்டின் தலைவர்கள்" எத்தனையோ சிறுர்கள் தமது ஆன்மீக வாழ்க்கையைப் பற்றி அறியாதவர்களாக வாழ்ந்து கொண்டு வருகின்றுர்கள். உலக வாழ்க்கையைப் பற்றி அறியும் ஆர்வம்கூட ஆன்மீக வாழ்க்கை மட்டில் இல்லை திருச்சபை சிறுர்களுக்கு தமது ஆன்ம வாழ்க்கையைப் பற்றி அறிவதற்கான நிகழ்ச்சிகளை (சிறுவர் வழிபாடு. ஞானஉபதேசம்) மேற்கொள்கின்ற போதிலும், எத்தனை சிறுர்கள் தமது பெற்ருேரால் அனுப்பி வைக்கப்படுகிருர்கள் என்ருல் அது கேள்விக்குறிதான்? பெற்ருேர் "மகனே கணிதவகுப்புக்குப் போ. விஞ்ஞானவகுப்புக்குப் போ" என்று அனுப்புகிருர்கள். ஆனல் ஞானதேச வகுப்பு என்ருல் அது பரவாயில்லை என்று இலட்சியம் செய்த பிள்ளைகளை உலக வாழ்வில் பற்றுள்ளவர்களாக்குகின்ருர்கள்.

இன்று எமது சமுதாயத்தில் சாதிக்கு ஒரு கோவில்களை நாம் காணக்கூடியதாக உள்ளது. அவன் தாழ்ந்த சாதி பூசைக்கு உதவக் கூடாது, கூடு தூக்க கூடாது என்று சாதிப் பிரச்சனைகளை உருவாக்குகின்ருேம். அந்தசாதியில் திருமணமும் செய்யக்கூடாது. சற்றேனும் முரண்பாடு ஏற்பட்டால் சண்டையில் இறங்குகிறேம். ஆக்கிரமிப்புகளில் இறங்குபவன் தானும் அழிவான் மற்றவர்களையும் அழித்துவிடுவான். ஏனைய மதமக்களுக்கு முன்மாதிரிகையாக இருக்கவேண்டிய நாமே இவ்வாறு இருந்தால் வேலியே பயிரை மேய்ந்ததுபோல் தான் இருக்கும்.

விழாக்களை நடத்துகிறேம். பகட்டான ஆடைகளை அணிகின்ருேம். ஆனல் எம்மிடம் உண்மையான மனமாற்றம் இல்லை. வழிபாடுகளில் முக்காடு போடாமல்விடுவது லேடிசுக்கு லேற்றசாகி விட்டது. காளையரும் கன்னியரும், கண்டு காதல் கொள்ளும் காதல் மண்டபமாக ஆலயங்கள், மாறி வருகின்றன திருச்சபை இவைகளை கண்டித்திருந்தும், விழலுக்கிறைத்த நீர் போல் காணப்படுகிறது. இதை அறிந்தே இயேசு "என் தந்தையின் இல்லத்தை கள்வர் குகையாக்க வேண்டாம்' என்று கூறியுள்ளார்.

இன்று நாம் நாமும் நமது குடும்பமும் என்ற குறுகிய வட்டத்தினுள் வாழ்ந்து கொண்டு வருகின்ருேம். பிறர் என்ன குற்றம் செய்கிருன் எனக் கவனிப்பதும், பிறரைப் பற்றி தேவையில்லாமல் கதைப்பது, அவனின் முன்னேற்றத்தைக் கண்டு பொருமைப்படுவது பிறரின் துன்பத்தைக் கண்டு சந்தோசப்படுவது அவனின் முன்னேற்றத்தைத் தடைசெய்வது, போன்றவைகளில்தான் நாம் பிறர் மட்டில் அக்கறை கொள்கிறேம். எம்மைப் பற்றி நாம் சிந்திப்பது கிடையாது. எம்மிடம் என்ன குறை இருக்கிறது என்று கண்டு பிடித்து அதை திருத்துவதற்கான வழிகளை நாம் தேடியது கிடையாது. பிறர் வாழ்க்கையைக் கணக்கிட்டு எம் வாழ்க்கைக்கு நாமே மண்ணை அள்ளிப்போடுகிறேம்.

எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் எமது வாழ்க்கையைப் பற்றி சிந்திப்பதில் கடமைப்பட்டுள்ளோம சிந்திப்பதோடு, மட்டும் நின்றுவிடாமல் எமது வாழ்வை மாற்றி அமைக்க முற்படவேண்டும். எமது ஆன்மீக வளர்ச்சியில் முன்னேறி, முடிவில்லா வாழ்க்கையைப் பெற உழைத்தல் எமது கடமையாகும். எனவே நாம் முடிவில்லா வாழ்வைப்பெற இவ்வுலக வாழ்வு தூய்மையானதாக இருத்தல் வேண்டும். அதற்கு நம் எண்ணங்கள் நல்லவையாக இருக்கவேண்டும். எண்ணங்கள் நல்லவைகளாக இருந்தால்தான் எம் வாழ்க்கை நல்லதாக அமையும் எனவே முதலில் நாம் திருந்தி நல்வாழ்வு வாழ்வதையே நமது உன்னத இலட்சியமாகக் கொள்வோம்!

S. செல்வக்குரு
புனித மடுத்தினூர் குருமடம்,
யாழ்ப்பாணம்.

அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை
22-9-1989



அன்பு இளம் உள்ளங்களுக்கு!

"கடவுள் இல்லை.

கடவுள் இருக்கிருர் என்பது ஒரு கட்டுக்கதை.

பிழைப்புக்காக மனிதனுல் உருவாக்கப்பட்டவரே கடவுள்" என்று ஒரு பேச்சாளன் மேடையில் முழங்கினுன். அவனது பேச்சுத்திறன் கண்டு மக்கள் திரள் திரளாகக் கூடினர். கடைசியாக, "கடவுளும் இல்லை, கத்தரிக்காயும் இல்லை. யாராவது கேள்வி கேட்க விரும்பினுல் மேடைக்கு வரலாம்" என்ருன்.

அந்நகரில் குடிகாரன் ஒருவன் குடிவெறியிலிருந்து குணமபட்டு நல்ல கிறிஸ்தவனாக மாறியிருந்தான். அவன் மேடைமீது ஏறினுன். ஒரு தோடம்பழத்தை எடுத்து தோலை மெதுவாக உரித்தான். "கேள்வி கேட்காமல் தோலை உரிக்கின்ருயே" என்று ஆத்திரமடைந்தான் பேச்சாளன். பழத்தை உரித்தவன் தின்றுகொண்டே, 'தின்று முடித்து விட்டுக் கேள்வியைக் கேட்கின்றேன், என்று சொல்லியவாறு சுளை சுளையாக சுவைத்துத் உண்டான். பின்னர், பேச்சாளனைப் பார்த்து,

"பழம் நன்ருய் இருக்கிறதா?" என்று கேட்டான்.

"பைத்தியக்காரா, பழத்தை நான் தின்று பார்க்காமல் அதன் சுவையை எவ்வாறு சொல்லமுடியும்?" என்ருன்;

"கடவுள் நல்லவர், என்பதை நீ சுவைத்துப்பார்த்தால் தானே தெரியும். பின் ஏன் கடவுள் இல்லை என உளறுகின்ருய்? என்று உரைத்தான். ஒரே கைதட்டல், ஆரவாரம். நாத்திகன் நாணிப்போனுன்.

"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்"

(சங். 34/8)

அன்பு நெஞ்சன் வி பி.

## பெண்களைப் பற்றி சில அறிஞர்கள்

(1) பெணகளுக்குப் பலம் குறைவுதான். ஆனல் அவர்களிடம் உள்ள துணிச்சல் ஒரு ஆணுக்குள்ளதைவிட அதிகம்.

(மகாத்மா)

(2) பெண்களால் உலகம் அழிந்ததுண்டு உண்மைதான். ஆனல் அழிவிலிருந்து உலகைக காப்பாற்றி வருபவர்களும் பெண்கள்தான் என்ற உண்மையை மறுக்க முடியாது

(சாக்கிரடீஸ்)

(3) ஆண்களின் துணிவு ஆள்வதில் இருக்கிறது. பெண்களின் துணிவு பணிவதில் இருக்கிறது. ஆனல் மௌனமே பெண்ணிற்கு புகழைத்தருகிறது.

(பிளேட்டோ)

(4) பெண் வழுவழுப்பான களிமண்ணைப் போன்றவள். ஆண்தான் அதில் கலையழகை உருவாக்கவேண்டும் அவ்வாறு உருவாக்க இசைந்து கொடுப்பவள்தான் பெண்.

(அரிஸ்டோட்டில்)

(5) உலகம் உய்வதற்கான வழிதேடிப் போராடிய உத்தமர்களின் வரலாற்றை ஊன்று நோக்கும்போது ஓர் உண்மை புலப்படுகின்றது. இத்தகைய தீரர்களின் உணர்ச்சிகளுக்கு உறுதுணையாக ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு பெண் வாழ்ந்திருக்கின்ருள் என்பதுதான் அது.

(பெர்ஞட்ஷா)



### குடும்ப வாழ்க்கையே ஓர் அழைத்தல்

எமது குடும்பம் ஒரு புனிதமான பாதையை நோக்கி வளர வேண்டுமானுல் நம்மை இயக்கும் பணியை கிறிஸ்துவிடம் ஒப்படைக்க வேண்டும்.

இறைவனது அழைத்தலுக்கு ஏற்ப வாழ்ந்து காட்டிய சாதனையில் தான் மோயீசனுடைய பெருமை அடங்கியிருக்கிறது. எத்தனை இடையூறுகள் அலை அலையாய் மோதிய போதிலும் நிலை குலையாது இறைவன் இட்ட இப்பணியைச் செய்து முடித்தது தான் இவரை இறைவனின் அழைத்தலுக்கு உகந்தவராக்கியது.

ஒவ்வொரு குடும்பத்திலுள்ளவர்களும் இறைவனின் அழைத்தலுக்கு ஏற்றவர்களாக வாழ வேண்டும். எத்தனை துன்பங்கள் வந்தாலென்ன துயரங்கள் வந்தாலென்ன அவற்றை ஏற்கும் மனப்பான்மை உள்ளவர்களாக வாழ வேண்டும் குடும்பம் என்ருல் எம் கிறிஸ்தவ சமுதாயங்கள் ஒன்று கூடி வாழ்வது தான் ஒரே குடும்பம். இப்படியான குடும்பம் ஞானஸ்நானம் என்னும் அழியா வாழ்வில் நிலையூன்றி விசுவாசத்தில் வளர்ந்து வருமானுல் ஓர் விசுவாசமான திருக்குடும்பமாக வாழ்ந்து வரும்.

நம் கிறிஸ்துவின் வாழ்க்கையை எடுத்து நோக்குவோமாயின் அவர் ஓர் எளிமையான வாழ்வையே வாழ்ந்து வந்தார். குடும்பத்தில் பெற்ருேரை மதித்து அவர்களுக்குக் கீழ்ப்படிந்து பணிந்து நடந்தார் இவ்வாறு கீழ்ப்படிகின்ற மனிதன் வெற்றிகளைச் சந்திப்பான் கீழ்ப்படிபவனே தன்னைத் தாழ்த்துகின்ருன். இறைவனே அவனை உயர்த்துகின்ருர்.

இவ்வாறு ஒவ்வொரு குடும்பமும் இறைவனின் விசுவாசத்தில் நிலையூன்றி என்றும் அழியாத தூய வாழ்வை வாழ்ந்து இறைவனின் அழைப்புக்கு ஏற்றவர்களாக வாழ்வோமாக.

—மரியதாஸ் கொன்செப்ரா ஜெயா, இளவாலை

### திருமணம்

இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும் என்று இறைவன் உருவாக்கிய திருமண உறவை இன்றுவரை எம்மதம் மிகவும் புனிதத்துடன் பாதுகாத்து வருகின்றது. ஆதியிலே இறைவனுல் ஆரம்பித்து ஆசீர்வதிக்கப்பட்ட இந்தத் திருமணம் கிறீஸ்து கானவூர்த் திருமணத்தின் மூலம் திருவருட் சாதனமாக்கியுள்ளார் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டியவர்களாகின்ருேம். நம் சமுதாய வாழ்வில் எக்குலத்தவராயினும், எந்தமதத்தினராயினும் திருமணமென்னும் உறவை தத்தம விருப்பப்படியே திருமண வாழ்வை அடைந்து கொள்கிருர்கள். ஆனல் எம் கத்தோலிக்க மதத்தைப் பொறுத்த வரையில் திருச்சபை அதிகாரிகள் விதித்த சட்ட திட்டங்கள், கிறஸ்தவ மதபீடங்கள் இவை அனைத்திற்கும் ஏற்றதாக திருமணங்கள் அமைய வேண்டும் இக்கோட்பாடுகள் எவையும் பிறமயங்களில் அனுஷ்டிக்கப்படவில்லை

தற்காலத்தில் கண்டதும் காதல் என்ற தோரணையில் பாடசாலை மாணவர்கள் தத்தம இஷ்டப்படி தம எதிர்கால குடும்பவாழ்வினை நிர்ணயிக்கின்றனர் இந் நிலையிலேதான் துள்ளித்திரியும் பள்ளி வாழ்வில் "சோஷல்" என்ற நவ நாகரீகத்தால் காதல் கொள்பவரின் சாதி, மத பாகுபாட்டை எடுத்துச் சிந்திக்க மறுக்கிறது இங்கேதான கலப்புத் திருமணங்கள் உருவாகின்றது பெற்ருர், பெரியார், சுற்றத்தவர், முட்டுக்கட்டையாக எதிர்ப்படுகின்றனர் இச்சந்தர்ப்பத்தில் நாம இவ்விருபாலாரும் நடந்துகொள்ளும் விததனைப் பற்றி ஆராயவோம். கணவன் கத்தோலிக்க மதத்தையும் மனைவி இந்துமதத்தையும் சார்ந்தவர்களென வைத்துக்கொள்வோம். ஆகவே கணவன், கிறிஸ்துவில் விசுவாசம் கொண்ட உண்மை வாழ்வு வாழ்பவனுக, ஏன மனைவிக்கு எடுத்துக்காட்டாக வாழ முற்படுவானுயின் பிறமதத்தைச் சார்ந்த அவனது மனைவிக்கு கணவனின் பற்றிலும பார்க்க மதப்பற்றே அதிகரிக்க வாயப்பு உண்டு. அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளையும், இம்மதத்திலேயே வளர்த்தெடுக்க சம்மதம கூறலாம. கணவனுனவன ஓய்வு நேரங்களிலும், தனது இல்லத்தில விவிலியத்தை முக்கியமாகக் கருதி அதை வாசித்து பிள்ளைகளுக்கு விளக்குவதாலும் கத்தோலிக்க வழிபாடுகளில் தம பிள்ளைகள் மனைவியுடன் கலந்துகொள்வதன் மூலமும் அவன் தன் மனைவிக்கு ஒரு வழிகாட்டியாகவும் மாறலாம். இதற்கு எதிர்மாருக தமது இன்பவாழ்வு, பட்டம, பதவி, கௌரவம் இவைகட்காக திருமணம் என்னும் இந்தப் புனித உறவுக்கு மாருன வழிகளில் அநேகம பேர் சென்றுகொண்டிருக்கின்றனர் இவர்களைப்போன்ருேர் புல்லுருவிகளை ஒத்தவர்கள் இவர்களுடைய வாழ்க்கையின காரணமாக எமது மதம் ஏனையவர்களால், மிதிக்கப்பட்டுக் கசக்கப்படும் மலர்களுக்கொப்பாகும் என்பதற்கையமில்லை.

—குருசுமுத்து தவம் நவாலி-மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்வாக்கு அறிவோம்

## சிறிய இறைவாக்கினர்-33

### சக்கரியாஸ்-1.

சக்கரியா என்ற சொல்லுக்கு "யாவே நினைவு கூர்ந்தார்." "யாவே கவனமாய் உள்ளார்" என்று பொருள். சக்கரியாவைப் பற்றி சிறிதே அறிய முடிகிறது. இவர் குருகுலத்தைச் சேர்ந்த இறைவாக்கினர் ஆவார். ஆலயம் கட்டுவதில் காட்டும் அக்கறையும், குருத்துவம், வழிபாடு ஆகியவற்றைப்பற்றி வலியுறுத்துவதும் இவர் குருகுலத்தைச் சேர்ந்தவர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

சக்கரியா ஆகமத்தில் இருபகுதிகள் உண்டு. அதி. 1–8 அடங்கிய பகுதி முதலாம் சக்கரியா என்றும் அதி. 9–14 அடங்கிய பகுதி இரண்டாம் சக்கரியா என்றும் அழைப்பர்.

ஆக்காயும், சக்கரியாவும் சமகாலத்தவர்கள். ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற குறிக்கோளுடன் உழைத்தவர்கள். அக்காய் ஆகமத்திற்குக் கூறப்பட்ட வரலாற்றுப் பின்னணி சக்கரியா ஆகமத்திற்கும் பொருந்தும் மக்கள் பாவ வாழ்க்கை உள்ளவர்களாக வாழ்ந்தனர். குறைவான விளைச்சலால் மக்கள் துன்பப்பட்டனர். பொறுமையிழந்தனர், மனந்தளர்ந்தனர். ஆலயம் கட்டுவதை நிறுத்திவைத்தனர்.

இந்நிலையில் ஆகாய் தனது இறைவாக்குப் பணியைத் தொடங்குகிறார். மக்களை ஊக்குவித்து ஆலயம் கட்டுவதைத் தொடங்கச் செய்தார். ஆலயம் மீண்டும் கட்டுவதற்குச் சன்மானமாகப் பொருளாதாரச் செழிப்பை இறைவன் தருவார் என வாக்குரைத்தார். மக்கள் ஆலயம் கட்டத்தொடங்கி ஒரு மாதத்திற்குப் பின் உற்சாகம் குறைந்தனர். ஆகாய் மீண்டும் ஊக்குவித்து ஆலயம் கட்டும் பணியைத் தொடர்ந்து நடக்கச் செய்தார். இந்தச் சூழ்நிலையில்தான் சக்கரியாசும் தனது இறைவாக்குப் பணியைத் தொடங்குகிறார்.

சக்கரியா தனது காட்சிகள், இறைவாக்குகளால் ஏற்கனவே நடந்துகொண்டிருந்த பணியை மேலும் ஊக்குவிக்கிறார். ஆலயம் கட்டுவதற்கு சன்மானமாக மெசியா வருகையை எடுத்துக்கூறி மக்களின் நம்பிக்கைக்குப் புத்துயிர் அளிக்கிறார். இறைவனது மெசியாவை அனுப்பும் திட்டம் உடனே நிறைவேறும் என்று உறுதி அளிக்கிறார். மக்களைத் திடப்படுத்துகிறார். மக்களுக்கு நம்பிக்கை அளிப்பது இந்நூலின் முக்கிய செய்தியாகும்.

—கி. சா. பங்கிராஸ்

அறிந்துகொள்ளுங்கள் 89

## கழுதை பேசியதா?

மோவாப் அரசன் பாலாக் முதல் அனுப்பிய தூதுக்கு தான் வருவதில்லை என்று மறுப்புக் கூறிய பின் மீண்டும் இரண்டாம் முறை பிரபுக்களை பல வெகுமதிகளுடன் அனுப்பி பாலாமை கட்டாயம் வரும்படி அழைத்தான் அரசன். ஏனென்றால் அவன் உயிர்பிழைக்க வேறு எந்த வழியுமின்றித் திண்டாடினான். இச்சமயம் பாலாம் மோவாப் சென்றான்.

செல்லும் வழியில் பாலாம் ஏறிச்சென்ற கழுதை பேசியதாக எண்ணாகமம் கூறுகின்றது (எண். 22 : 21 - 31) கழுதை பேசும் சம்பவத்திற்கு பலர் பலவாறாகப் பொருள் கூறுகின்றனர். சிலர் உண்மையாக நடந்தது என்றும் சிலர் அதைக் கனவு என்றும், வேறு சிலர் அது ஒரு கதை என்றும் கூறுகின்றனர். கழுதை எழுப்பிய சப்தம் பாலாம் காதுகளில் மனிதக்குரலின் சப்தம்போல் கேட்கும்படி கடவுள் செய்தாரா? அல்லது மந்திரவாதியான பாலாம் கழுதையின் சாதாரண சப்தத்தை மறைநூலில் உள்ளதுபோல் பொருள் கொண்டாரா? நீஸாவின் கிரகோரியார் கூறுகிறார். பாலாம் ஒரு குறிகாரனானதால் சில சம்பவங்களை மிருகங்கள், பறவைகள், சத்தத்திலிருந்தும், அசைவிலிருந்தும் கண்டுபிடிக்க முடிந்தது. எனவே தான் இஸ்ராயேலரை சபிக்கப்போவதை இறைவன் விரும்பவில்லை என்பதை கழுதை போக மறுத்ததிலிருந்து கண்டுகொண்டான்"

இச்சம்பவத்திற்கு யார் என்ன பொருள் கொடுத்தாலும் எமக்கு முக்கியமானது அதன் மறைபொருளை அறிந்துகொள்வது. இறைவன் தான் தெரிந்துகொண்ட மக்களை எவ்வாறு பராமரித்து வந்தார் என்பதையும், எந்த மனிதனாலும் இயற்கையாலும் இறைவனின் திட்டத்தை மாற்றமுடியாது என்பதையும், இறைவனுக்கு இயற்கை அடங்கி ஆளும் வல்லமை உண்டு என்பதையும் எண்ணாகம ஆசிரியர் உணர்த்துகிறார். இறைவனின் வார்த்தை எவ்வளவு வல்லமை உள்ளது என்றால் அதை மிருகத்தின் வாயில் நின்றும் கேட்கலாம் என்பதே.

பாலாக் அரசன் பாலாமிடம் பல முறை இஸ்ராயேலரை சபிக்கும்படி கேட்டபோது எல்லாம் பாலாம் இஸ்ராயேலரை ஆசிர்வதிப்பது போன்ற வார்த்தைகளே சொன்னான் பாலாக் அரசன் பல முயற்சிகள் தோல்வியுற்றபடியால் பாலாமை அவரது நாட்டிற்கு அனுப்பிவிட்டான். (எண். 23 : 1 - 24 : 9)

இங்கு பாலாமின் இறைவாக்கு உச்சநிலை அடைகிறது. யாக்கோபிலிருந்து ஒரு விண் மீன் உதிக்கும். இஸ்ராயேலரிடமிருந்து ஒரு செங்கோல் எழும்பும். (எண். 24 : 17) இவ்வாக்கு தாவீதின் அரசாட்சியையும், கிறிஸ்துவின் வருகையையும் முன் குறிப்பதாக அமைகிறது.

—இ. ம. ஜெயசீலன்.

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்.

வாசக நேயர்களே!

"தம்பி உள்ளான்- சண்டைக்கு அஞ்சான்"! என்ற முதுமொழிகளை அன்றுடம் கேட்டிருப்பீர்கள். ஆனாலும் இன்று நண்பர்களைவிட சகோதரர்கள் தானே ஒருவரை ஒருவர் முட்டி மோதி சக + உதரர்கள் என்ற உண்மையை மறந்துவிடுகிறார்கள். காரணம் சகோதரர்களை நம்பினால் அவர்களின் சுகம், சொத்து, பொருள்பண்டம், அனைத்தையும் அபகரித்து விடுவார்களே என்ற ஒருவித "நல்ல எண்ணம்"

முதுமொழி இன்னொன்றையும் சொல்லுகின்றது! "ஆயிரம் பேரையும் தேடலாம்- ஆனாலும் ஒரு சகோதரனை தேட முடியாது" என்றார்கள். ஆனாலும் எங்கள் மத்தியிலே நடப்பது என்ன? பணத்திற்காக, காணிக்காக, தங்கள் சுயவாழ்விற்காக, தங்கள் சுயநல வாழ்விற்காக சகோதரர்களையே தூக்கி எறிந்துவிடும் எத்தனை பேர் எம் மத்தியில வாழ்கிறார்கள்! இதற்கு திருநூல் தரும் பதில். 18/19 இல்

"சகோதரனால் உதவிபெறுகிற சகோதரன் வலுப்பெற்ற நகரம் போலாம். அவர்களுடைய தீர்ப்புகளும், நகர வாயில்களின் தாழ்ப்பாள் போலாம்"

"சகோதரர்களை தூக்கி எறிபவர்கள் இந்த ஒரு வார்த்தையை மட்டும் ஊன்றி சிந்திக்க வேண்டுகின்றேன்.

"அளந்து பேசு" என்றார்கள் நம் ஆன்றோர்கள் நாம் ஒருவரைப் பார்த்து சுட்டிக் காட்டி, தட்டிக்கேட்கும் போதும், சுட்டுவிரல் மட்டும் அவரை நோக்கி நீள, மற்றைய மூன்று விரல்களும் எம் இதயத்தை நோக்கி "நீ தீர்ப்பிடுவது சரியா என்பதை மூன்று தரம் சிந்தி" என்பதற்காகவே மூன்று விரல்கள் மடித்துச் சிந்திக்க வைக்கின்றது என்று ஒரு கவிஞன் பாடினான்.

"திருநூல் ஆசிரியர் விட்டுக் கொடுப்பாரா என்ன? 18/20 இல் "மனிதனுடைய வாயின் பயனால் அவன் வயிறு நிறையும்- தன் உதடுகளிலிருந்து புறப்படும் வார்த்தைகளால் அவன் நிறைவுகொள்வான்"

பொருத்தம் பார்த்தீர்களா?

"வார்த்தைகள் மனிதனை நிறைவு கொள்ளச்செய்யும். ஆனால் வார்த்தைகள் யாரிமிருந்து புறப்படுகிறதோ அவரவர் தகுதிக்கேற்ப செயல் உருப்பெறும்.

"ஆதியிலே இறைவனின் வார்த்தைகளைப் பார்த்தீர்களா? "உண்டாகட்டும்" என்ற உடனே அது செயல் வடிவம் பெற்றது- படைப்பு உண்டானது! ஆனால் மனித வார்த்தைகளோ அவரவர்களின் தகுதிக்கேற்ப- பதவிக்கேற்ப செயல்வடிவம் எடுக்கின்றது. இது நீங்களும், நானும் யோசிக்க வேண்டியதல்ல, அனுபவிக்கின்ற உண்மை.

உங்கள் அன்பன்

எஸ். ஏ. நாதர்.

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 3<br>சுடர்: 33 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

### வாரம் ஒரு வார்த்தை:

ஒரு மாநிலத்தில் ஏழைகள் ஒடுக்கப்படுவதையும், நியாயமும் நீதியும் புறக்கணிக்கப்படுவதையும் நீ காண்பாயாகில் அதைப் பற்றி வியப்படையாதே. ஏனென்றால் உயர்ந்தவனுக்கு மேல் அதி உயர்ந்தவனும் உண்டு. சங். திரு: 5: 7

### அங்கத்துவ ஆவல்:

அன்பின் அன்பு விழிக்கு,

உங்களது காவலன் கண்மணிப் பகுதி மிகவும் சிறப்பாக உள்ளது. அதற்காக உங்களுக்கு எமது பாராட்டுக்கள், எங்கள் ஆக்கங்களை உங்கள் பகுதிக்கு அனுப்ப ஆவலாய் உள்ளோம். எங்களை அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

அன்புடன்
ம. மேரி வின்சென்ரு
ம மேரி லதா

★ கற்கும் அண்டு கற்கும் பாடசாலையைக் குறிக்கத்தவறிவிட்டீர்கள், தயவு செய்து குறித்து அனுப்பவும்.
ஆண்டு 12, 13 கற்பவர்களுக்கு கௌரவ அங்கத்துவம் தரப்படும்.

நன்றி.

அன்புடன்
அன்பு விழி

### நாமும் அழைச்சலும்

எம்மை அழைத்தார் இறைவன் ஏன்? தம் அன்பினுக்கு ஒரு கருவியாக, எம் வாழ்வினுக்கு ஓர் அருவியாக வாழ அழைக்கப்பட்ட நாம் எப்படியும் வாழலாம் என எண்ணக் கூடாது. மாறாக இப்படித்தான் வாழ வேண்டும் என இறை யேசு காட்டிய வழியில் செல்ல வேண்டும். இறைவன் எம்மை அழைக்கும் போது தூயவர்களாக அழைப்பதில்லை. அழைத்தன் பின்பே எம்மைத் தம் பணிக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கின்றார். ஆகவே நாமும் அதற்கு ஏற்றவர்களாக எமது தீய பாவ நாட்டங்களை விட்டெறிந்து புதிய வாழ்வை நோக்கி வீறுநடை போட வேண்டும். நாம் புதிய வாழ்வை பெறும் போதே உண்மையாக இறைவனில் சங்கமிக்க முடியும்.

அன்று ஆபிரகாம் மோயீசன் என்று பலரை முகம்முகமாக அழைத்த இறைவன், இன்றும்கூட எம்மைத் தம்பணிக்கு அழைத்துக் கொண்டே இருக்கிறார் அவரின் அழைப்பை உணர்ந்த நாம் அதற்கு செவிமடுப்போம். அவ் அழைத்தலை மகிழ்வுடன் ஏற்று மென்மேலும் வளர்க்க வழிசமைப்போம். அழைத்த இறைவனுக்கு எம்மை உருக்கி மெழுகாவோம். பகைமைக்கு அன்பாவோம். ஏழைகளின் தோழனாவோம்.

M. M. நிக்ஸன்
அங். எண்: A/11.

### வாடாத மாலைகள்

விடிவுக்குள் எரிகின்ற நெருப்புக்கள்—நாம்
இருளுக்குள் விழுகின்ற பிறவிகள்
அருளுக்கு அஞ்சிடும் அறிவுகள்—அதில்
பொருளுக்கு மிஞ்சிடும் ஆசைகள்.

உறவுக்குள் சிரிக்கின்ற நட்புகள்
உள்ளத்துள் இருண்ட தப்புகள்
அன்புக்குள் அடங்காத உள்ளங்கள்—அலை
பிறவிக்குள் வராத கடலலைகள்

உண்மைக்குள் தூங்கும் உறுப்புக்கள்—நாம்
அழிவுக்குள் அகப்பட்ட அநாதைகள்
விளக்கினுள் விழுந்த விட்டில்கள்—எம்
பரப்பிலே குறைந்த பாரங்கள்

உரிமைக்குள் கூவிடும் சேவல்கள்
உண்மைக்குள் தூங்கிடும் ஆந்தைகள்
மனதுக்குள் எண்ணற்ற ஏக்கங்கள்—அலை
மனிதத்துள் வாடாத மாலைகள்.

J. E. ரட்ணராஜ்
அ. எ. 65.

### அங்கத்துவம்

201. P: மிரியம் றுக்ஷானு 10 புனித சவேரியார் பெ. ம. ம. வி,
202. P. மேரியஸ் சுஜீவன் 7 புனித சவேரியார் ஆ. ம. ம வி.
203. சி. லூயிஸ் நாயகம் 11 ஜே. க. த. க. பா. சில்லாலை.
204. வ. அமலானந்தக்குமார் 6 ஜே. க. த. க. பா. புங்குடுதீவு.
205 ச. ஜொய்வின் அசம்ரா 8 நாவாட்டான் ம. வி.
206. S. பமில் நிலந்தினி 8 நாவாட்டான் ம, வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதாகம வினுவிடைப் போட்டி -28

விடைகளை மாத்திரம் தெளிவாக எழுதி உங்கள் பெயர் முகவரியுடன் 8-10-89 இற்கு முன் பாதுகாவலன் அ. பெ. இ. 2 யாழ்ப்பாணம்என்றமுகவரிக்கு அனுப்பிவையுங்கள்பரிசுரூபா 25/= சரியான விடைகளும் பரிசு பெறுபவர் பெயரும் அடுத்த போட்டியும், 27-10-89இல்வெளிவரும், விடைகளை 2 சாமுவேல் (1—5) இல் காணலாம்.

**வினுக்கள்**

(1) சவுலின் மரணத்தைக் குறித்துத் தாவீது தன் துயரத்தை என்ன வகையில் வெளிப்படுத்தினுர்? (விடையை சுருக்க மாகத் தருக.)

(2) சவுலின் மரணத்தைக் குறித்துத் தாவீது பாடிய புலம் பலின் இறுதி வாக்கியம் என்ன?

(3) சவுலின் மகன் இசுபோத்தைக் கொன்ற இரேக்காப், பாவனு என்பவர்களுக்கு தாவீது அரசன் கொடுத்த தண் டனை யாது?

(4) தாவீது மன்னன் இஸ்ராயேலை ஆண்டகாலம் எவ்வளவு?

(5) யோவாயும், அபிசாயும், அப்நேரைத் துரத்திச் செல்கை யில் எதிர் கொண்ட பாலைவனத்தின் பெயரென்ன?

**போட்டி 27இன் சரியான விடைகள்**

(1) ஆண்டவரால் சாமுவேலுக்கு கூறப்பட்டது.

(2) ஐயாயிரம் சீக்கல் வெண்கலம் ஆகும்.

(3) தாவீதால், பிலிஸ்தியனுன கோலியாத்திற்குக் கூறப்பட் டது.

(4) மிக்கோல் சவுலின் மகள், தாவீதுக்கு மனைவியாகக் கொடுக்கப்பட்டாள்.

(5) "சவுலும் இறைவாக்கினருள் ஒருவனே?" என்ற பழ மொழி வழங்கலாயிற்று.

### வேதாகம வி. வி. போட்டி 27இன் முடிவு

இம்முறை 212 பேர் சரியான விடைகளை எழுதியுள்ளனர். சரியான விடை எழுதியவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

பரிசுபெறும் நற்பேறுளர் :
செல்வி, மேரி எமறன்சியா நடராஜா
53/2 புதுவிதி லேன்,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

## புனித செபமாலை மாதா திருநாள்

### கொழும்புத்துறை

22-9-89 மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி தினமும் 4-45 மணிக்கு செபமாலைத் தியானமும் திருப் பலி மறையுரைகளும் இடம் பெறும்.

1-ம் திகதி காலை 6-00 மணிக்கு முதல் திருப்பலியும், 7 மணிக்குத் திருநாள் திருப்பலியும், மாலை 4 மணிக்கு திருச் சுருப பவனியும் இடம் பெறும்.

அன்னையின் ஆசீர் பெற்றுச் செல்ல
அன்புடன் அழைக்கின்றோம்.

A/200 பங்குத்தந்தை.

## புனித பத்திரிசியார் கல்லூரி

### யாழ்ப்பாணம்

பிரவேச விண்ணப்பம்—1990

பின்வரும் வகுப்புகளுக்கு மாத்திரம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

முதலாம் வருடம்: 1-02-1984—31-01-1985 உள்பிறந்திருக்க வேண்டும்.

4-ஆம் வருடம் 1981இல் பிறந்திருக்க வேண்டும்.
6-ஆம் ,, 1979இல் ,, ,,
9-ஆம் ,, 1976இல் ,, ,,

விண்ணப்பப் பத்திரம்—ரூ. 25·00 (பரீட்சைக் கட்டணம் உட்பட) 2-10-1989 தொடக்கம்—23-10-1989 வரை பாடசாலை நாட்களில் கல்லூரிக் காரியாலயத்தில் காலையில் நேரில் வந்து கேட்பவருக்குக் கொடுக்கப்படும். நிரப்பப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித் தினம் 27—10—1989.

பிரவேசப் பரீட்சைத் தினம்: 4-11-1989 காலை 8-30 மணிக்கு. 6ஆம், 9ஆம் வருட வகுப்புகளுக்கு நடாத்தப்படும் பிரவேசப் பரீட்சையில் திறமை காண்பிக்கும் முதல் பத்து வீத மாண வர்களுக்கு கடந்த வருடம்போல் யாழ். ஆயரது புலமைப் பரிசில் வழங்கப்படும்.

A/202 கல்லூரி அதிபர்.

## திசை மாறிய....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மாலா சொர்க்கத்திற்கு ஏறிக் கொண்டிருந்தாள். நான் அன்று சோதனை எடுத்ததற்கு பதில் வந்து விட்டது. சோதனை என்றதும் மாலா தொப்பென்று பூமிக்கு வந்து விட்டாள். மோகன் தொடர்ந் தேன். "குருமடத்திற்கு செல் வதற்கு விண்ணப்பித்திருந் தேன். அதற்காகத்தான் உம் முடைய பிறந்த நாளன்று சோதனை எடுத்தேன். இப்போ நான் சித்தியடைந்துள்ளேன் என்றும் அடுத்த மாதம் 5ம் திகதி வரச்சொல்லி கடிதம் வந்திருக்குது. "நான் ஒரு சிறந்த குருவாக வரவேண்டு மென்று மன்றுடும்" என்று சொல்லி விட்டு நான் போயிற்று வாறன் என்று மோகன் வேகமாகச் சென்று விட்டான். மாலாவுக்கு சம் மட்டியால் மோகன் ஓங்கி அடித்தது போல் நிலைகுலைந்து விட்டாள்.

நான் என்ன செய்வேன். நான் கட்டிய கற்பனைக் கோட் டையெல்லாம் வீண் தானு? இதற்காகத்தான். இறைவன் அவரிடம் எனது எண்ணத்தை சொல்ல முற்பட்ட போதெல் லாம் சந்தர்ப்பத்தை அளிக் காது போனுனே? இலவம் பழத்தை கிளி காத்துக்கொண் டிருக்க அது பஞ்சாய்ப் பறந்து போனது போல் நானும் இரண்டு வருடமாக அவரை நினைத்து கொண்டிருந்தேன். அவர் தன்னை மக்களுக்கு பணி செய்ய அர்ப்பணித்து விட் டாரே.

நான் நினைத்தவரை இறை வன் தனக்கென்று தேர்ந்து கொண்டார். இறைவனுக்குப் பணிசெய்ய அவர் நினைத்த போது அவரை நினைத்துக் கொண்டிருந்த நான் ஏன் இறைவனுக்கு பணிசெய்யக் கூடாது? உடனே முடிவெடுத் தாள் தான் ஒரு அருட்சோத ரியாக போக வேண்டுமென்று தாய் தந்தையரின் அனு மதியை நாடினுள். அவர்கள் எவ்வளவோ சொல்லியும் கேளாமல் இறைவனின் சித்தம் இது தான் அவருக்குப் பணி செய்து. வாழ்வதே எனது வாழ்க்கை என்று இல்லற வாழ்வின் திசை மாற்றி துற வற வாழ்வின் திசை நோக்கி செல்கின்றுள். மாலா என் னும் அந்த வருங்காலக் கன் னிகை. (முற்றும்)

## புனித மிக்கேல் ஆலயத் திருவிழா

### உரும்பிராய்

20-09-1989 புதன் மாலை 5 மணிக்குக் கொடியேற்றம்.
வழிபாடுகள் தினமும் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.

23-09-1989 சனிக்கிழமை மாலை சமாதானத்திற்கான விசேஷ வழிபாடு இடம் பெறும்.

24-09-1989 ஞாயிறு முதல் நன்மை நாள்.
திருப்பலி காலை 7-30 மணிக்கு நடைபெறும்.
மாலை நாட்டின் அமைதிக்காக தியானவழிபாடு இடம் பெறும்.

28-09-1989 (மாலை) நற்கருணை தினம்.

29-09-1989 வெள்ளி காலை 7-00 மணிக்கு திருநாள் திருப் பலியும், திருச்சுருப பவனியும் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

A/209 பங்குத்தந்தை, உரும்பிராய்.

## இறை அழைப்பு

அறம் தேய்ந்து மறம்பெருகும் இவ்வுலகிலே
அருள் மகன் யேசுவின் தாகமதைத் தணித்திட
அறம் செய்து, செபம் செய்து, தவம் செய்து
அன்புப் பணியாற்றிட அழைக்கின்றுர் இறைவன்
ஆம் இன்று உன்னை அழைக்கின்றுர்.

இலங்கை, இந்திய நாடுகளில் செபமாலைத் தாசர் (Rosarians) குருக்களாகவும் அருள் சகோதரர்களாகவும் இறை பணியாற்றி வருகின்றனர்.

க. பொ. த. (உ. த.), க. பொ. த. (சா. த.) வகுப்பு களில் படிக்கும் மாணவர்களும் படிப்பை முடித்தவர்களும் உடனே தொடர்பு கொள்ளவும்,

Director
Arul Ashram
No. 5, Temple Road,
Jaffna.

அதிபர்
அருள் ஆச்சிரமம்
இல. 5, கோவில்வீதி
யாழ்ப்பாணம்.

A/198.

பிரியா
நினைவின்
31-ம் நாள்



யோசவ் அல்பிறெட்
மண்ணில்:
8-11-1961
விண்ணில்:
23-8-1989

தேனில் இருந்து
சுவை பிரியுமா?
பூவிலிருந்து மணம்
பிரியுமா?
அல்பிறெட்
எம் மனதிலிருந்து
உன் நினைவு பிரியுமா?

தேனுய் இருக்கத் தெய்வமாய் வாழ்ந்தாய் - அதனுல்
நமக்கு அது வழியே நாம் போகுமளவும்,
நமக்கென்ன வென்றிருக்க முடியவில்லையே!
விண்ணுலகு சென்றாலும் அங்கு நீ
எங்களுக்கோர் விடிவெள்ளியாய் - இருப்பாய்.

தந்தையே இவரது ஆன்மாவை உமது கரங்களில் ஏற்றருளும்.

இவரின் பிரிவால் துயருறும்
தந்தை, தாய், சகோதர சகோதரிகள், பேத்தி, மருமக்கள்: யுட்சி, யான்சி, டயானு, உறவினர்கள்.

கலா, இளவாலை. A/205

### 31-ம் நாள் நினைவு



ச. அந்தோனிப்பிள்ளை றிச்சாட்
மண்ணில்: 18-6-1922 விண்ணில்: 31-8-1989

அன்னரின் ஆன்ம சாந்திக் காக 30-9-89 சனிக்கிழமை காலை 6 மணிக்கு இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத் தில் திருப்பலி ஒப்புக் கொடுக் கப்படும்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பிரதான வீதி,
இளவாலை. A/207

### 31-ம் நாள் நினைவு அஞ்சலி

திருமதி.
எம். எம். ஏ. பெர்ணுண்டோ
(ரஜனி)
ஆசிரியை. மன்/முள்ளிக்குளம்
பாடசாலை.

மலர்வு: 23-04-1963 உதிர்வு: 29-08-1989

நோயொன்றும் காணவில்லை
நோய் உமக்கு தீரவில்லை.
நேர் மோட்சம் சென்றுவிட்டீர்
நேயர் எம்மை கலங்கவிட்டு.
அன்பே உருவான இறைவா
சடுதியாய் எடுத்துக்கொண்ட
உமது அடியாளை விரைவாக
வான்வீட்டில் சேர்த்தருளும்.

பிரிவால் துடிக்கும்
அன்புக்கணவன்:
எஸ். ஏ. பெர்ணுடோ
அருமைப்பிள்ளைகள்: றிரேன், கீர்த்தனு. பெற்றோர் மாமா மாமி, சகோதரர்கள், மைத் துனர்கள், உறவினர்கள், நண்பர்கள், பாடசாலை மாணவ மாணவியர்.

முள்ளிக்குளம்
மறிச்சுக்கட்டி A/201



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# அதிகார துர்ப்பிரயோகத்துக்கு பிரசைகள் கண்டனம்

தீவிரவாதிகளின் வன்செயல்களையும் அரசின் கொடுமையான அதிகார துர்ப்பிரயோகத்தையும் கண்டித்து புத்திஜீவிகள், கத்தோலிக்க குருக்கள், துறவிகள் உட்பட நூற்றுக் கணக்கான இலங்கைப் பிரசைகள் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளனர். மக்களைப் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கைகளை எடுக்கும்போது சட்டத்தையும் நீதியையும் மதிக்கும்படியும், நீதிமன்றத்துக்கு அப்பாற்பட்ட அதிகாரப் பிரயோகத்தைத் தவிர்ப்பதற்கு ஆவன செய்யுமாறும் இவர்கள் அரசையும் ஜனாதிபதியையும் கேட்டுள்ளனர்.

தீவிரவாத சந்தேக நபர்கள் விசாரணையின்றி கொல்லப்படுவதைக் குறிப்பிட்டு பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கு இந் நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் அது நாட்டின் நலனுக்கே கேடு விளைக்கும் எனவும் அமைதியான முறையின் நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கு சாத்தியமான எல்லாவற்றையும் செய்யவேண்டுமெனவும் இவ்வேண்டுகோளில் கூறப்பட்டுள்ளது.

ஆயர் பிராங்க் மாக்கஸ் பெர்ணன்டோ, அ. ம. தி. மாகாணத் தலைவர் பிதா அன்செலம்சில்வா, சமூக சமய நிலையத்தின் இயக்குநர் பிதா திஸ்ஸ பாலசூரிய முதலியோர் இவ்வேண்டுகோளில் கைச்சாத்திட்டுள்ளனர்.

## பொதுநிலையினரின் வளர்ச்சி துறவறத்தினர்க்கு ஒரு சவால்

35 மறைமாவட்டங்களிலுள்ள 81 துறவறசபைகளைச் சேர்ந்த 400 துறவியர் மணிலாவில் ஒன்று கூடியபோது துறவிகளின் எதிர்கால நிலை பற்றி அதில் ஆராயப்பட்டது.

"வருங்காலத்தில் துறவிகளுக்குப் பதிலாக பொதுநிலையினரே திருச்சபையின் மாற்றங்களுக்கும், நற்செய்திப் பணிக்கும் கருத்தாக்களாக இருப்பார்கள். 20 ஆம் நூற்றுண்டு துறவியருக்கு உரியதென்றால் 21 ஆம் நூற்றுண்டு பொதுநிலையினருக்குரியதாகும்" என பிதா கார்சியா பரடேஸ் என்னும் ஸ்பானிய இறையியலாளர் கூறினர். மேலும் அவர் கூறியதாவது.

"வத்திக்கான் சங்கத்தின் பின்னர் 350,000 க்கு மேற்பட்ட துறவிகள் தமது சபைகளிலிருந்து வெளியேறியுள்ளனர். இந்நிலையில் பொதுநிலையினர் துறவியரோடு ஒத்துழைப்பவராக மட்டுமன்றி பங்காளராகவும் விளங்கவேண்டியிருக்கிறது. பிலிப்பைன் போன்ற மூன்றும் மண்டல கத்தோலிக்க நாடுகளில் தேவஅழைத்தல்கள் அதிகரித்துள்ள போதிலும், சனத்தொகைப் பெருக்கத்திற்கு ஈடுகொடுக்க மட்டுமே இது போதியதாக இருக்கிறது"

அனுபவம்மிக்க கன்னியரான சிஸ்டர் அசன்ஷன் மாட்டினஸ் துறவற வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்துவது சாத்தியமே என அபிப்பிராயம் தெரிவித்தார்.

1972- 75 இராணுவச்சட்டத்தின் போது நாம் வேறு பல பணிகளில் ஈடுபட்டோம். படிப்படியாக கன்னியர் தமது மடங்களுக்கு திருப்பியழைக்கப்பட்டுவிட்டனர். மீண்டும் அவர்களை பணிக்களங்களுக்கு கொண்டு வரவேண்டுமென்பது இப்போது தெளிவாகிறது" என்று அவர் கூறினர்.

நல்லாயன் சபையைச் சேர்ந்த சகோதரி கிறிஸ்தீன் தான் அண்மையில் 700 துறவற சபைகள் மறைந்துவிட்டதால், துறவியர் செல்வாக்கு குறைந்துவிட்டதெனக் கூறினர்.

ஏழைகளுக்கும், நசுக்கப்பட்டோருக்கும் பணிசெய்து அகிம்சை முறையில் போராடி சமாதானத்தை ஏற்படுத்துவது தமது காத்திரமான பணியெனப் பலர் கருதினர்.

## நீண்ட கடிதத்துக்கு திருத்தந்தையின் பதில்

சென்ற மே மாதம் ஒடுக்கி மாவட்டத்திலுள்ள றேகன் ஜோண்சன் தமக்கு எழுதிய 2400 மீற்றர் நீளமான சமாதானக் கடிதத்துக்கு திருத்தந்தை பதிலனுப்பியுள்ளார். இக்கடிதத்தை அனுப்புவதற்கு ஜோண்சனுக்கு காகிதாதிகள் ரூ. 8000, விமானத் தபாற்கட்டணம் ரூ. 2058 செலவாயிற்று. இதனை எழுதிமுடிக்க நான்கு ஆண்டுகள் எடுத்தது. இதன் நிறை 100.5 கிலோ கிராம்.

தமிழ் நாட்டவராகிய ஜோண்சன் மாணவர்களுக்கு டியூஷன் கொடுப்பதன் மூலமும், உல்லாசப்பிரயாணிகளுக்கு வழிகாட்டுவதன் மூலமும் தமது வாழ்க்கையை நடத்திவருகிறார். ஓர் அமெரிக்க பிரயாணியின் ஆலோசனைப்படி அரியசெயலொன்றைச் செய்ய நினைத்தே அவர் இச்செயலில் ஈடுபட்டார்.

முதலில் ஜனாதிபதி றேகனுக்கு இத்தகைய கடிதமொன்றை எழுதமுயன்றார். ஆனால் தூதரகம் அதை அனுப்ப மறுத்ததால் அதைவிடச் சிறிய ஒரு கடிதத்தை ஜனாதிபதி றேகனுக்கு அனுப்பி வைத்தார். ஜனாதிபதி அதற்குப் பதில் அனுப்பியதுடன் றேகன் என்னும் பேரை எடுத்துக்கொள்ள அனுமதியும் அளித்தார்.

## பெண்ணுரிமைக்கெதிரான சட்டங்கள் நீக்கப்படவேண்டும்.

பாகிஸ்தான் சட்ட வல்லுனர் சங்கத்தலைவரான இளைப்பாறிய நீதிபதி சௌகாத் அலி பெண்களின் உரிமைகளுக்கு எதிரான கூட்டங்கள் அனைத்தும் சட்டத்தின் மூலம் நீக்கப்படவேண்டும் எனக் கூறியுள்ளார். அரசியலமைப்பை திருத்துவதற்கு வேண்டிய பெரும்பான்மை அரசுக்கு இல்லாவிட்டாலும் நாடாளுமன்றத்தில் திருத்தச் சட்டங்களைக் கொண்டு வருவதன் மூலம் மனித உரிமைகளுக்கு முரணான சட்டங்களை நீக்கிவிடலாம் என்று அவர் மேலும் பத்திரிகையாளருக்குத் தெரிவித்தார்.

### பேட்டி

அ.ம.தி. உயர்தலைவருடனான பேட்டி தொடர்ச்சி இவ்வாரம் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம். தொடர்ச்சியை அடுத்தவாரம் எதிர்பாருங்கள். (ஆ-ர்)

## உதயபூரில் ஹிரோஷிமா தினம்

ஹிரோஷிமா தினத்தையொட்டி ஆகஸ்ட் 5-ம் திகதி உதயபூரிலுள்ள பல கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் சமாதான ஊர்வலமொன்றை நடத்தினர். பண்டாரி தர்ஷக் மண்டபத்தில் இந்த ஊர்வலம் முடிவடைந்தது.

அங்கு நடைபெற்ற கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக இருந்த பிரதி கல்வி அமைச்சரான கலாநிதி கிரிஜா வியாஸ் உரையாற்றுகையில் "21-ம் நூற்றுண்டை சமாதானச் சூழலில் ஆரம்பிக்கவேண்டும். ஏனெனில் சமாதானம் என்னும் அடித்தளத்தின் மீதுதான் மனித நாகரிகம் விருத்தியடைய முடியும்" என்று கூறினர்.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த அரவிந்த்சிங் மேவார் அறிவிலும், தொடர்புசாதனங்களிலும் ஏற்பட்டுள்ள பிரமாண்டமான வளர்ச்சி காரணமாக ஏற்பட்டுள்ள நன்மைகளையும், ஆபத்துகளையும் வலியுறுத்தி "இன்று ஒவ்வொருவரின் செயலும் பிறரைப் பாதிக்கின்றது. ஆகவே நாம் சமாதானத்தைத் தூண்டவேண்டுமேயொழிய யுத்த ஆர்வத்தையல்ல" என்று கூறினர்.

அநேக மதத்தலைவர்களும் அங்கு சமுகமாயிருந்தனர்.

உதயபூர் ஆயர் ஜோசவ் பதல் பேசுகையில் புனித பிரான்ஸிஸ் அசிசியாரைப்பற்றிக் குறிப்பிட்டார். திருத்தந்தை பாப்பு 2ம் அருள் சின்னப்பரின் தலைமையில் உலகெங்குமுள்ள மதத்தலைவர்கள் அசிசியில் ஒன்றுகூடி சமாதானத்திற்காக செபித்தமையை நினைவூட்டி இது எதிர்காலத்துக்கு நம்பிக்கை தரும் ஓர் அடையாளம் எனக் கூறினர்.

## சிஸ்டர் அல்போன்ஸா வைத்திய நிலையம் அங்குரார்ப்பணம்

முத்திப்பேறு பெற்ற சிஸ்டர் அல்பொண்ஸாவின் பிறப்பிடமாகிய கூடமலூரில் அவள் பெயரால் ஒரு வைத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கோட்டயம் வைத்தியக் கல்லூரியின், வைத்திய அதிகாரியான டாக்டர் பி. ஜி. ராமகிருஷ்ணபிள்ளை ஆகஸ்ட் 18-ம் திகதி அதனைத் திறந்து வைத்தார். இந்த நிலையம் ஏழைகளுக்கு இலவச வைத்திய பரிசோதனையும் சிகிச்சையும் அளிக்கும்.

இந்த வைத்திய நிலையம் கூடமலூர் ஆலய வளவிலேயே அமைந்துள்ளது. 24 மணிநேரமும் இங்கு வைத்திய உதவியைப் பெற்றுக்கொள்ளலாம். மருந்துகள் இலவசமாக வழங்கப்படும். இதற்கென கூடமலூர் ஆலய பங்குக் குரவர் பிதா அந்தோனி எலெச்செங்கலத்தின் தலைமையில் நிதி திரட்டப்படுகிறது.

## மூன்று நாடுகளில் மூன்றிலொரு பங்கு குழந்தை மரணங்கள்

உலகின் மூன்றிலொரு பங்கு குழந்தை மரணங்கள் பங்களாதேசம், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளிலேயே நிகழ்கின்றன என யூனிசெப் அறிக்கையொன்றில் காணப்படுகிறது. கடந்த 12 மாதங்களில் உலகில் ஐந்து லட்சம் பிள்ளைகள் அபிவிருத்தி குறைந்ததனுலோ தடைப்பட்டதனுலோ இறந்திருப்பதாகவும் அந்த அறிக்கை கூறுகின்றது.

கடன்பட்டுள்ள அரசாங்கங்கள் தமது செலவைக் குறைக்க வேண்டி சமூக சேவைக்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைத்தமை குழந்தைகளின் நலனைப் பாதித்துள்ளது. அபிவிருத்தி குறைந்த 40 நாடுகள் கடந்த சில ஆண்டுகளாக சுகாதாரச் செலவை 50 வீதத்தாலும் கல்விக்கான செலவை 25 வீதத்தாலும் குறைத்துள்ளன. இவற்றுள் அரைவாசி நாடுகளில் பாடசாலை செல்லும் சிறுவர் தொகையும் குறைந்து வருகிறது.

ஆசிய நாடுகள் பொருளாதாரத்தில் முன்னேறிக்கொண்டிருந்த போதிலும் பெரும்பாலான வறிய மக்கள் அங்குதான் உள்ளனர்.

ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கடன் பளுவினலும் மூலப்பொருள்களின் விலை வீழ்ச்சியினலும் அபிவிருத்தி பின்தங்கியுள்ளது.

"பல நாடுகளில் பொறுப்பற்ற விதத்தில் கொடுக்கப்பட்டு, பொறுப்பற்ற விதத்தில் பெறப்பட்ட கோடிக்கணக்கான டாலர்களினுல் ஏழைகள் அடைந்த நன்மை மிக அற்பமானதே என யூனிசெப் ஸ்தாபனத்தின் தலைவர் ஜம்ஸ் கிரான்ட் கூறுகின்றார்.

### நன்றி! நன்றி!!

இவ்வாரம் 7760 பாதுகாவலன் பிரதிகள் அச்சிடப்படுகின்றன. உங்கள் பங்கில் நடக்கும் ஊக்குவிப்புக்களுக்கு எம்மனமார்ந்தநன்றிகளும், பாராட்டுக்களும்.

ஆர்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 22ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல: QB/ 1001/ 58/81

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நான் உன்னோடிருக்கிறேன் என்கிறார் ஆண்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org